விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 21 செவ்வாய்க்கிழமை (05.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 017

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்

### இலங்கைக்கு இன்று திடீர் விஜயம் கோட்டா, மகிந்த, கூட்டமைப்புடன் பேச்சு



(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சு.ஜெய்சங்கர் திடீர் விஜயமாக இலங்கைக்கு இன்று வருகிறார்.

இந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி கோட்டா, பிரதமர் மகிந்த மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தரப்புக்களை இந்திய வெளிவிவகார அமைச்சர் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். (8ஆம் பக்கம் பார்க்க)

## 7 வட மாகாணத்தில் நேற்றும் பேருக்கு கொரோனா தொற்று

### ஐவர் மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்றும் 7 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ 19

## 45 ஆயிரத்தை கடந்த கொரோனாத் தொற்று

### நேற்றும் 277 பேர் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த 19

## பொருட்கள் வாங்குவதுபோல பாசாங்கு செய்துவிட்டு

### பெண்ணின் சங்கிலி அபகரிப்பு வவுனியாவில் சம்பவம்


(வவுனியா)

வவுனியா சாந்தசோலைப் பகுதியில் பொருட்கள் வாங்குவது போல 19

### பொய்யுரைப்பதை நிறுத்திவிட்டு

# சுமந்திரன் தனது திறமைகளை தமிழருக்காக பயன்படுத்த வேண்டும்

## நீதியரசர் விக்னேஸ்வரன் அழைப்பு



(கொழும்பு)

சுமந்திரன் பொய் கூறுவதை நிறுத்த வேண்டும் என்று அவரிடம் கோரிக்கை விடுக்கின்றேன். சுமந்திரன் தனது திறமைகளைத் தமிழ் மக்களின் நன்மைகளுக்காக பயன்படுத்தாமல் அரசாங்கத்தின் நன்மைகளுக்காக பயன்படுத்தி வருவதே எனக்கும் அவருக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கு காரணமாகும். விரைவில் அவர் இந்த நிலைமையில் இருந்து விடுபட்டு, தனது சொந்த மக்களுக்கு நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதை புரிந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாடுபட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன்.

நேற்று அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், ஐ.நா மனித உரிமைகள் சபை கூட்டத் தொடர் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தான் தயாரித்து என்னால் நிராகரிக்கப்பட்ட வரைவுக்கு நான் தற்போது அனுமதி அளித்துள்ளதாக 19

### இன்றைய சபை அமர்வின்போது

## அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பிரதமருடன் பேச்சு

### சாள்ஸ் நிர்மலநாதன்

(மன்னார்)

2021ஆம் ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை 19

## கொரோனாவால் மேலும் இரு மரணம்

### உயிரிழப்பு 215 ஆக உயர்வு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 2 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு 19

### வல்வை மீனவர் மீது

## இந்திய மீனவர்கள் கண்மூடித்தனமான தாக்குதல்

### தாக்குதலுக்குள்ளானவர் தனிமைப்படுத்தப்பட்டார்

(கரணவாய்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டி 19

### வடமராட்சி கிழக்கில் மணல் கடத்தலை

## முறியடித்த அதிரடிப் படை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு பகுதியில் மணல் கொள்ளையில் ஈடுபட்டு வந்த கும்பலை நேற்று 19

### புலோலி தொற்றாளர்

## பருத்தித்துறை, நெல்லியடி பகுதிகளில் நடமாடியுள்ளார்

### மருதனார்மடத்துக்கும் சென்றுள்ளார்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் புலோலியைச் 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மைத்துனருடன் கைகலப்பு 15 வயது சிறுவன் உயிரிழப்பு

## அம்பாறையில் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை - அக்கரைப்பற்று பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக தாக்கப்பட்ட சிறுவன் உயிரிழந்துள்ளார். நேற்று இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அட்டாளைச்சேனை பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளார்.

அட்டாளைச்சேனை பகுதியில் சகோதரியின் கணவருக்கும் குறித்த சிறுவனுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பின்போது மேற்கொள்ளப்பட்ட தாக்குலில் காயமடைந்த சிறுவன் உடனடியாக அட்டாளைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில்சம்பவம் தொடர்பில் மைத்துனரை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

## கிளிநொச்சி பூநகரி பகுதியில்

# தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளை பயன்படுத்திய

## ஐந்து மீனவர்கள் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி மண்டைக்கல்லாற்றின் அண்டிய கடற்பரப்பில் சட்டவிரோதமாக தடைசெய்யப்பட்ட தங்கூசிவலைகளைப் பயன்படுத்திய ஐந்து மீனவர்கள் நேற்று கடற்படையினரால் கைது செய்யப்பட்டு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஐந்து மீனவர்கள், அவர்களின் படகுகள் மூன்று, படகு இயந்திரங்கள், பயன்படுத்திய தங்கூசி வலைகள் என்பவற்றை மீட்ட நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் இன்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ம -315)

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை

# வைத்தியர், தாதியர் உள்ளிட்ட 7 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்தியர், தாதியர் உள்ளிட்ட 7 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். புலோலி பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதியானதையடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புலோலி பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கொரோனாத் தொற்று நேற்று உறுதியானது. நேற்று முன்தினம் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையின் 7ஆம் இலக்க விடுதியில் அவர் அனுமதிக்கப்பட்டார். காய்ச்சல், சளி, இருமல், தொண்டை நோ போன்ற அறிகுறிகளும் அவரில் தென்பட்டது.

இதையடுத்து, அவரின் பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டு, யாழ் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அவர் கொரோனா அறிகுறிகளை அதிகம் வெளிப்படுத்தியதையடுத்து, நேற்று முன்தினம் இரவு அவர் வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டார்.

அவரது பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியானது. அவருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, அவருக்கு சிகிச்சையளித்த, தொடர்பில் இருந்த வைத்தியசாலை பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வைத்தியர் ஒருவர், தாதியர்கள் இருவர், மருத்துவ பணியாளர்கள் இருவர், சிற்றூழியர்கள் இருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம)

# யாழ். பல்கலை மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட வகுப்பு தடை நீக்கம்

## மாணவர்களின் நலன் கருதி முடிவெடுக்கப்பட்டதாக துணைவேந்தர் சிறி சற்குணராஜா அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களின் நலன் கருதி அவர்களுக்கு விதிக்கப்பட்ட வகுப்பு தடையை நீக்குவதாக யாழ். பல்கலை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறி சற்குணராஜா அறிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையையும் கருத்திற் கொண்டு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக விதிக்கப்பட்ட வகுப்பு தடை நீக்கப்பட்டுள்ளது.

துணைவேந்தருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் கலாநிதி எஸ். ராஜ் உமேஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி யாழ். பல்லைக் கழகத்தில் எற்பட்டிருந்த இரு தரப்பினருக்கு இடையிலான மோதலின் பின்னர் 07 மாணவர்களுக்கு வகுப்பு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதில் 03 மாணவர்களுக்கு ஒரு வருட வகுப்புத்தடையும் 04 மாணவர்களுக்கு 06 மாத கால வகுப்புத்தடையும் விதிக்கப்பட்டிருந்தது.

கலைப்பிரிவின் மூன்றாம் வருட மாணவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரியே இந்த உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-33)


# மரண அறிவித்தல்

தோற்றம் 02 – 06 – 1948



மறைவு 04 – 01 – 2021

## கண்மணி குமாரசாமி (பொன்னையா)

பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கண்மணி குமாரசாமி நேற்று (04.01.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குமாரசாமியின் (பொன்னையா) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பிரதீபனின் அன்புத் தாயாரும் யோகநாதன், காலஞ்சென்ற தம்பித்துரை, பகவதி, நாகேந்திரம், ராசாத்தி, சந்திரராஜா (பாலு - கனடா), நகுலேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சகுந்தலாதேவி, சந்திராதேவி, கந்தசாமி, முத்துலட்சுமி, நவரத்தினம், மதிவதனி (கனடா), பத்மாவதி (கனடா), காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, காலஞ்சென்ற நடராசா, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.01.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மதியம் 12.00 மணியளவில் பத்தமேனி தீத்தாங்குளம் உல்லிவிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (5177)

பத்தமேனி,
அச்சுவேலி.

தகவல்:-
குடும்பத்தினர்


# சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட

## 7500 கிலோ மஞ்சள் மீட்பு

(கொழும்பு)

சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 15,000, 000 ரூபா பெறுமதியுடைய 7500 கிலா கிராம் மஞ்சள் தூள் சுங்க திணைக்களத்தின் இடர் மேலாண்மை பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த மஞ்சள் தொகை 19 350 கிலோ கிராம் கோதுமை மா எனக் கூறப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதோடு இதன் பெறுமதி 1, 550, 000 எனக்கூறப்பட்டுள்ளது.

எனினும் சுங்க பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது 7500 கிலோ கிராம் மஞ்சள் தூள் மற்றும் 11, 850 கிலோ கிராம் கோதுமை மா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ம)


பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு ஆர்வமா ?

32 வருட அனுபவமுடையவரின் இலவச ஆலோசனை பெற

N. ஈஸ்வரராஜா

070 100 3223

( இரவு 7.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை ) (5174)



**For Jaffna University Students...**

- Rooms for rent nearby Medical faculty and AHSU faculties.
- 'Naatsaar' (courtyard) house with optimum level of cross ventilation and natural light.
- High raised opened ventilators (just below roof ridge) in each room give natural ventilation (due to convectional air flow) without mechanical fans. Thus, makes adequate fresh air entry in order to keep zero BOD.
- Calm place away from any automobile noise/ smoke.
- As you all have to get ready to go out at same time, adequate number of toilets and bathrooms are available.
- Exercise facilities - 'Table tennis' and 'Orbi Track' - in order to keep your brains active. (5176)

*** Only for female students.**
Please call for more detail... **077 294 0340**

# தண்டனையை விலக்கக் கோரி யாழ்.பல்கலை.மாணவர் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகப் பேரவையினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களில் ஒரு பகுதியினர் தங்களது தண்டனையை விலக்கிக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பல்கலைக்கழக பரமேஸ்வரர் ஆலய நுழைவாயிலில் உணவு ஒறுப்புப் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

இதனால் பல்கலைக்கழக வாயிலைச் சுற்றி படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

கடந்த வருடம் ஒக்டோபர் 8 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கும் மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை முற்றி, கைகலப்பிலும் ஈடுபட்டனர்.

அன்றைய தினம் இரவு வரை தொடர்ந்த முரண்பாடுகள், மூன்றாம் வருட மாணவர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையில் முரண் நிலையையடுத்து சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படும் என துணைவேந்தர் வாக்குறுதி அளித்தார். அதன் பின்னர் மாணவர்களும் கலைந்து சென்றனர்.

அதனையடுத்து ஒக்டோபர் 9 ஆம் திகதி இடம்பெற்ற விசேட பேரவைக் கூட்டத்தில் வணிக முகாமைத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் ஓய்வு நிலைப் பேராசிரியருமான மா.நடராஜசுந்தரம் தனிநபர் விசாரணையாளராக நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

விசாரணை முடிவில் 130 பக்கங்களைக் கொண்ட விரிவான விசாரணை அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு அந்த அறிக்கை பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று சபையில் ஆராயப்பட்டபின், பேரவைக்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

அதன்பின் இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று சபை பரிந்துரைத்த தண்டனைகள் உறுதிப்படுத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே தங்களது தண்டனையை விலக்கிக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மாணவர்கள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் நேற்று இறங்கினர். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும், சமூக இடைவெளியுடன் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேநேரம், பேரவையில் ஆராயப்பட்ட விடயங்களைப் பகிரங்கப்படுத்தியதன் மூலம் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மாணவர் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. (5-4-33)

# இலங்கை வருகிறார் இந்திய அமைச்சர்



(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இன்று செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் அழைப்பின் பேரில் விஜயம் மேற்கொள்ளும் அவர் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை இலங்கையில் இருந்து அரச தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை 2021 ஆம் ஆண்டு இலங்கைக்கு வரும் முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளிலும் கொவிட் -19 பயணக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்த பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (நி-4)



துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 60 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் 19 லீற்றர் கசிப்புடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய இக்கைது நடவடிக்கை நேற்று இடம் பெற்றுள்ளது. குறித்த பெண் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த வேளை பொலிஸார் பேருந்தை வழி மறித்து பரிசோதனை மேற்கொண்ட போது 19 லீற்றர் கசிப்புடன் குறித்த பெண் கைது செய்யப்பட்டார். இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கின்சிலி கேரத் தெரிவித்துள்ளார். (5-4-316)

# தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து கோரினால்

## அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமாகலாம்

### சுட்டிக் காட்டுகின்றார் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா



(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை கோரி பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் சூழ்நிலையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் இந்த விவகாரத்தில் ஓர் கூட்டான வேண்டுகோளை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்க முடியுமானால் ஒரு வேளைஅது வெற்றியளிக்கக் கூடும் என சட்டத்தரணியும் தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவருமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இயல்பாகவே அக்கறை கொண்டிருப்பதை எவரும் மறுத்திட இயலாது.

ஆயினும்,தமிழ் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை என்று அரசாங்கத்தரப்பில் திட்டவட்டமாக கூறப்பட்டுவரும் நிலையில், நீண்டபல வருடங்களாக சிறையில் வாடும் இந்தத் தமிழர்களின் விவகாரத்தை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் என்ற அடிப்படையில் இனி யாவது அணுகுவது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இந்தக் கைதிகள் அரசியல் கைதிகளா? என்பதை சர்ச்சை ஆக்கி, விவாதப் பிரதிவாதங்களுக்கு இடமளிக்காமல் இவர்களின் விடுதலையை மாத்திரமே இலக்காகக் கொண்டு அதற்காக சாத்தியமான சகல வ்ழிகளிலும் முயற்சிப்பதே பொருத்தமானது.

இப்போது தேவைப்படுவது எல்லாம் தொடர்ந்து மௌனமாக துன்பப்படும் இந்தத் நாதியற்ற தமிழர்களின் விடுதலைக்கான தேவை ஆக்கபூர்வமானதும் அர்த்தம் மிக்கதுமான நடவடிக்கைகளே.

ஆகவே, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த சகல தமிழ் எம்.பிக்களும் ஓர் கூட்டான கோரிக்கையை சமர்ப்பிப்பது இன்றைய நிலையில் இந்த விடயத்தில் மிகவும் அவசியமானது.

மொத்தம் 28 தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாக ஒரே குரலில் உரிய கோரிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் முன்வைத்தால் அதற்கு உரித்தான கணிப்பினை கருத்தில் கொண்டவராக அவர் அதனை பரிசீலிக்க வேண்டி இருக்கும்.

எனவே இந்த நடவடிக்கையை உடனடியாக முன்னெடுக்கும் விதத்தில் தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காக தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கும் 'குரலற்றோர் அமைப்பு' செயலில் இறங்க வேண்டும் என்ற வேண்டுகோளை நாம் விடுக்கின்றோம்.

நாதியற்ற தமிழ்க் கைதிகளின் விடுதலையை ஓர் புதிய அணுகுமுறையோடு கையாள்வதற்கும் சாதிப்பதற்கும் வழி ஏற்படும் என்ற எதிர்பார்ப்போடு இந்த வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# விதியை பின்பற்றுங்கள், இல்லையெனில் வராதீர்கள் இந்திய அணிக்கு குயின்ஸ்லாந்து அமைச்சர் பதில்



இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இருபது-20, ஒருநாள் போட்டிகள் முடிந்த நிலையில், தற்போது நான்கு போட்டி கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. அவுஸ்திரேலியா சென்றபோது 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் இருந்தது. அதன்பின் கிரிக்கெட் விளையாடியது.

4ஆவது டெஸ்ட் பிரிஸ்பேனில் நடைபெறவுள்ளது. பிரிஸ்பேன் கிரிக்கெட் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது கொரோனா வைரஸ் அதிகரித்து வருவதால் குயின்ஸ்லாந்து மாநிலத்திற்கு வருபவர்கள் யாராக இருந்தாலும் தனிமைப்படுத்தல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என அம்மாநில அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இந்திய அணி டுபாயில் 14 நாட்களும், அதன்பின் அவுஸ்திரேலியா சென்ற பின்னர் அங்கு 14 நாட்களும் இருந்தன. அவுஸ்திரேலியாவில் இருந்து தொடரை முடித்து சொந்த நாடு திரும்புவதற்கு முன், இன்னொருமுறை தனிமைப்படுத்தலில் இருக்க இந்திய அணி விரும்பவில்லை. இதனால் போட்டியை சிட்னியிலேயே நடத்த இந்திய அணி வற்புறுத்தியுள்ளது.

இந்த நிலையில் குயின்ஸ்லாந்து சுகாதாரத்துறை அமைச்சர் ரோஸ்பேட்ஸ் தெரிவிக்கையில், "இந்திய கிரிக்கெட் அணி தனிமைப்படுத்தல் விதி முறையை எளிதாக்க கேட்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அவர்கள் குயின்ஸ்லாந்து வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாவிடில், இங்கே வரவேண்டாம்" எனத் தெரிவித்தார். (4)

# இந்தியன் சுப்பர் லீக்

## ஈஸ்ட் பெங்கால் முதல் வெற்றி

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியின் 45 ஆவது லீக் ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் 3-1 என்ற கோல் கணக்கில் ஒடிசாவை தோற்கடித்தது.

11 அணிகள் இடையிலான 7-வது இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து தொடர் கோவாவில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த 45 ஆவது லீக் ஆட்டத்தில் அறிமுக அணியான ஈஸ்ட் பெங்கால் 3-1 என்ற கோல் கணக்கில் ஒடிசாவை தோற்கடித்தது.

8 ஆவது ஆட்டத்தில் ஆடிய ஈஸ்ட் பெங்கால் அணி பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.

இன்னும் வெற்றிக் கணக்கை தொடங்காத ஒடிசா அணிக்கு இது 6ஆவது தோல்வியாகும்.

மற்றொரு லீக் ஆட்டத்தில் ஏ.டி.கே.மோகன் பகான் அணி 2-0 என்ற கோல்கணக்கில் நோர்த் ஈஸ்ட் யுனைடெட்டை வீழ்த்தி 6ஆவது வெற்றியை பெற்றதுடன், புள்ளிப்பட்டியலிலும் முதலிடத்துக்கு முன்னேறியது. (4)

# லா லிகா கால்பந்து தொடர் பார்சிலோனா அணி வெற்றி



லா லிகா கால்பந்து தொடரின் ஹூஸ்கா அணிக்கெதிரான போட்டியில், பார்சிலோனா அணி வெற்றிபெற்றுள்ளது.

எல் எல்கரோஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டியில், பார்சிலோனா அணியும் ஹூஸ்கா அணியும் மோதின.

பரபரப்பாக உள்ளூர் நேரப்படி நேற்று நடைபெற்ற இப் போட்டியில், பார்சிலோனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


இதில் பார்சிலோனா அணி சார்பில், பிரென்கீ டி ஜோங் 27 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

இந்த வெற்றியின் மூலம் பார்சிலோனா அணி, 28 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியது. தோல்வியடைந்த ஹூஸ்கா அணி 12 புள்ளிகளுடன் இறுதி இடத்தில் உள்ளது. (4)

# தென்னாபிரிக்கா- இலங்கை டெஸ்ட்; ரபாடாவிற்கு இடமில்லை

தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கு இடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் டெஸ்டில் தென்னாபிரிக்காவின் நம்பிக்கை நட்சத்திர பந்து வீச்சாளர் ரபாடா இடம் பெறவில்லை.

2ஆவது போட்டியில் விளையாட அணியில் சேர்க்கப்பட்டார். நேற்று முன்தினம் 2ஆவது போட்டி தொடங்கியது. அப்போட்டியில் ரபாடா சேர்க்கப்படவில்லை. இது அனைவரும் ஆச்சரியத்தை கொடுத்தது.



இது தொடர்பாக அணித் தலைவர் டி கொக் தெரிவிக்கையில்,

அடுத்து அவுஸ்திரேலிய தொடருக்கு சிறப்பான வகையில் உடற்தகுதி பெறுவதற்காகவே அணியில் சேர்க்கப்படவில்லை என தெரிவித்துள்ளார். (4)

# ரஹானே துணிச்சலான கப்டன்



கப்டன் பதவியில் ரஹானே செயற்படும் விதத்தை அவுஸ்திரேலிய முன்னாள் கப்டனும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான இயன் சேப்பல் பாராட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

மெல்பேர்ன் டெஸ்டில் கப்டனாக அசத்திய ரஹானே இந்திய அணிக்கு வெற்றி தேடி தந்ததில் ஆச்சரியம் இல்லை. ஏனெனில் அவர் 2017இல் தர்மசாலாவில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் கப்டன் பதவியில் சிறப்பாக செயற்பட்டார்.

அவர் இந்திய அணியை வழிநடத்த பிறந்தவர் என்பதை அறிந்து கொண்டேன். அந்த டெஸ்டில் வோர்னர், சுமித் ஜோடி சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தபோது அறிமுக சுழற்பந்து வீரர் குல்தீப் யாதவை பந்துவீச அழைத்தார். இது அவரது துணிச்சலான முடிவு. அதற்கு நல்ல பலன் கிடைத்தது.

இந்த 2 டெஸ்ட்களிலும் ஜடேஜாவின் பங்கு அதிகம் இருப்பதை கவனிக்க வேண்டும். அது ஆட்டத்தின் போக்கையே மாற்றியது. தலைமை பண்புக்கே உரிய குணத்துடன் அணியை வழிநடத்தி செல்லும் துணிச்சல் மிக்கவர் ரஹானே.

நெருக்கடியான நேரத்தில் மிகவும் அமைதியாக இருப்பார். சக வீரர்களிடம் நன்மதிப்பை பெற்றுள்ளார். இவை இரண்டும் அவரிடம் உள்ள சிறந்த தலைமைப் பண்பாக கருதுகிறேன் என மேலும் தெரிவித்தார். (4)

# இன்ஸ்டாகிராமில் 25 கோடி

## றொனால்டோ சாதனை


இன்ஸ்டாகிராமில் உலகிலேயே அதிகளவானோர் பின்பற்றும் நபர் என்ற சாதனையை கிறிஸ்டியானோ றொனால்டோ படைத்துள்ளார்.

கால்பந்து உலகில் இந்த தலைமுறையின் சிறந்த வீரராக கருதப்படுபவர் கிறிஸ்டியானோ றொனால்டோ. போர்த்துக்கல் கால்பந்து அணியின் கப்டனான இவர் மான்செஸ்டர் யுனெடெட், ரியல்மாட்ரிட் ஆகிய கிளப் அணிகளுக்காக நீண்ட காலம் விளையாடியுள்ளார்.

தற்போது இத்தாலியின் யுவான்டஸ் அணிக்காக விளையாடி வருகிறார்கள். இவரை சமூக வலைத்தளங்களில் பின்தொடரும் ரசிகர்களின் எண்ணிக்கை மிகமிக அதிகம்.

கிறிஸ்டியானோ றொனால்டோவின் இன்ஸ்டாகிராம் பக்கத்தை பின்பற்றுவோர் எண்ணிக்கை 250 மில்லியனை கடந்துள்ளது.

இதன் மூலம் இன்ஸ்டாகிராமில் 25 கோடி பேர் பின்பற்றும் ஒரே நபர் என்ற பெருமையை பெற்றுள்ளார். (4)



# தனியார் வைத்தியசாலைகளில் கொரோனா சிகிச்சைக்கு அனுமதி?

## சுகாதார அதிகாரிகள் ஆலோசனை



(கொழும்பு)

கொழும்பில் உள்ள லங்கா தனியார் வைத்தியசாலையில் **(Lanka Hospitals)** கொரோனா தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அனுமதி வழங்குவது குறித்து சுகாதார அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

கொரோனா தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க அனுமதி கோரி லங்கா வைத்தியசாலை மற்றும் நவலோகா வைத்தியசாலை ஆகியன விண்ணப்பித்திருந்தன.

இதனையடுத்து இந்த இரு வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சு அதிகாரிகள் அண்மையில் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள், தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கக்கூடிய வசதிகள் குறித்து ஆராய்ந்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசெல குணவர்தன தெரிவித்தார்.

இதனையடுத்து கொழும்பு நாரஹேன்பிட்டியில் உள்ள லங்கா வைத்தியசாலை கொரோனாத் தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் திருப்திகரமாக உள்ளதாக சுகாதார அதிகாரிகள் பரிந்துரைத்துள்ளதாகத் தெரியவருகிறது. எனினும் வைத்தியசாலையில் தற்போதுள்ள அமைப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்களைச் செயற்படுத்தி அது குறித்து முன்மொழிவை சமர்ப்பித்தால் கொரோனா சிகிச்சை மையமாக செயற்பட லங்கா வைத்தியசாலைக்கு அனுமதி வழங்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

இதற்கான அனுமதி வழங்கப்பட்டால் நோயாளிகளை லங்கா வைத்தியசாலைகளுக்கு அனுப்பும் திட்டம் சுகாதார சேவைகள் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும். அதே நேரத்தில் நோயாளிகளை முகாமைத்துவம் செய்தல், தீவிர சிகிச்சை பிரிவு கவனிப்பு என்பன லங்கா வைத்தியசாலையால் முன்னெடுக்கப்படும்.

அங்கு செல்ல விரும்புவோர் சிகிச்சைகளுக்கான முழுச் செலவையும் தாங்களே ஏற்க வேண்டியிருக்கும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசெல குணவர்தன தெரிவித்தார்.

இதற்கிடையில், கொழும்பு - நவலோகா வைத்தியசாலை தற்போது மக்கள் அதிகம் உள்ள பரபரப்பான பகுதியில் அமைந்துள்ளதால் கொரோனா சிகிச்சை மையமாகச் செயற்பட ஏற்றது அல்ல என்ற முடிவுக்கு சுகாதார அமைச்சு அதிகாரிகள் வந்துள்ளனர். எனினும் வேறொரு பொருத்தமான இடத்தை கொரோனா சிகிச்சை மையமாக அடையாளம் காட்டினால் அனுமதி குறித்துப் பரிசீலிக்கப்படும் என சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (நி-4)


# தேர்தல் ஆணைக்குழு

வாக்களிப்பதற்கு தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்

**தேருநர் இடாப்புக்களின் மீளாய்வு - 2020**

**பாதியளவில் மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களும் மீள்குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படாத பிரதேசங்களிலும் தேருநர்களைப் பதிவு செய்தல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான விசேட அறிவித்தல்.**

வட மாகாணத்தின் கீழ்க்காணும் கிராம அலுவலர் பிரிவுகளில் 2019 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்ட தேருநர்களிற்கிடையே தற்போது உண்மையாக வாழ்கின்றவர்களின் பெயர்களை, 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படுகின்ற தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்காக விண்ணப்பப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பப் பத்திரங்களைவடமாகாணத்தில் வதிந்துள்ளவர்கள் வடமாகாணத்தில் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஏனைய மாவட்டங்களில் வதிந்துள்ளவர்கள் அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து குறித்த விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இந்த விண்ணப் பப் படிவங்களை www.elections.gov.lk இணையத்தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதி 2021 சனவரி 05 ஆம் திகதியிலிருந்து 2021 பெப்ரவரி 01 ஆம் திகதி வரையாகுமென்பதுடன், விண்ணப்பப்பத்திரங்களை பிழையின்றி பூர்த்தி செய்து தாங்கள் தற்சமயம் வதிந்திருக்கும் பிரிவின் கிராம அலுவலரின் பரிந்துரையோடு உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு 2021 பெப்ரவரி 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளித்தல் வேண்டும்.

மேலும், கீழ்க்காணும் கிராம அலுவலர் பிரிவுகளில் வதிந்திருந்து ஏற்கனவே தொழில்/ கல்வி/ வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளவர்களின் தகவல்களையும் குறித்த விண்ணப்பப்பத்திரத்தில் உட்சேர்த்து அவர்களின் நெருங்கிய உறவினரொருவரால்/ அட்டர்னி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளவரொருவரால் கையொப்பமிட்டு 2021 பெப்ரவரி 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளித்தல் வேண்டும். முழுக் குடும்பமாக வெளிநாடு சென்றிருந்தால் அந்த நபர்களின் விண்ணப்பம் குறித்த நாட்டின் இலங்கைத் தூதுவர் அலுவலகத்தினூடாக 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதிக்கு முன் கையளிப்பதற்கு நடவடிக்கையெடுக்கவும்.

| மாவட்டத்தின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் | கிராம அலுவலர் பிரிவின் பெயர் | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | தெல்லிப்பளை | J/226 நகுலேஸ்வரம், J/233 காங்கேசன்துறை மேற்கு, J/234 காங்கேசன்துறை மத்தி, J/235 காங்கேசன்துறை தெற்கு, J/238 கட்டுவான், J/240 தென்மயிலை, J/241 வறுத்தலைவிளான், J/ 242 குரும்பசிட்டி, J/243 குரும்பசிட்டி கிழக்கு, J/244 வயாவிளான் கிழக்கு, J/245 வயாவிளான் மேற்கு, J/246 மயிலிட்டி வடக்கு, J/248 மயிலிட்டிதுறை தெற்கு, J/249 தைட்டி வடக்கு, J/250 தைட்டி மேற்கு, J/251 மைலிட்டிதுறை வடக்கு, J/252 பலாலி தெற்கு, J/253 பலாலி கிழக்கு, J/254 பலாலி வடக்கு, J/255 பலாலி வடமேல், J/256 பலாலி மேற்கு | | |
| கிளிநொச்சி | கண்டாவளை | KN 46 ஆனையிறவு | | |
| | பச்சிலைப்பள்ளி | KN 92 இத்தாவில் | KN 93 முகமாலை | KN 94 வேம்போடுகேணி |
| மன்னார் | முசலி | MN 153 முள்ளிக்குளம் | | |

www.elections.gov.lk எனும் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்தும் குறித்த விண்ணப்பப்பத்திரத்தை தரையிறக்கம் செய்துகொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம் : 011-2868441,42,43
மின்னஞ்சல் முகவரி : info@elections.gov.lk
இணையத்தளம் : www.elections.gov.lk

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை, இராஜகிரிய.
2021.01.01

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011-2369437 | அம்பாந்தோட்டை | 047-2256248 | குருநாகல் | 037-2222369 |
| கொழும்பு மாவட்ட | 011-2369438 | யாழ்ப்பாணம் | 021-2222655 | புத்தளம் | 032-2265246 |
| கம்பஹா | 033-2222047 | கிளிநொச்சி | 021-2285664 | அநுராதபுரம் | 025-2222551 |
| களுத்துறை | 034-2222266 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| கண்டி | 081-2233187 | வவுனியா | 024-2222311 | பதுளை | 055-2222424 |
| மாத்தளை | 066-2222422 | முல்லைத்தீவு | 021-2061426 | மொணராகலை | 055-2276315 |
| நுவரெலியா | 052-2222325 | மட்டக்களப்பு | 065-2224312 | இரத்தினபுரி | 045-2222023 |
| காலி | 091-2234028 | அம்பாறை | 063-2224342 | கேகாலை | 035-2222561 |
| மாத்தறை | 041-2222305 | திருகோணமலை | 026-2222304 | | |

**சரியாகப் பதிவு செய்துகொள்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவும்**

(C-1094)


## சம்பள உயர்வு இல்லையேல் போராட்டம் வெடிக்கும்

(ஹற்றன்)

தொழிலாளர்களுக்கு வெறும் 25 ரூபாய் சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கான சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு இடமளிக்க முடியாதென பெருந்தோட்டத் தொழிலாளர் ஊதிய உரிமைக்கான இயக்கத்தின் செயற்பாட்டாளர் தங்கவேல் கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

அதாவது அடிப்படை நாட்சம்பளமாக ஆயிரம் ரூபாயும் 25 நாட்கள் வேலையும் அவசியம். அவ்வாறு இல்லாவிட்டால் தொடர் போராட்டம் வெடிக்குமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மஸ்கெலியாவில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## 565 பேர் குணமடைந்தனர்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 37 ஆயிரத்து 817 ஆக உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் மட்டும் 565 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது. (நி-4)

# பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் நகரசபை சுகாதாரத் தொழிலாளர்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் வெளிவாரி அடிப்படையில் (ஒப்பந்த அடிப்படையில் ) வருடக் கணக்கில் பணிபுரிந்து வந்த சுகாதாரத் தொழிலாளர்கள் கடந்த டிசெம்பர் 31ஆம் திகதியிலிருந்து சம்பளப் பிரச்சினை காரணமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதால் வட்டாரங்களில் குப்பைகள் தேங்கி வருவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 5-10 வருடங்களாக சாவகச்சேரி நகரசபையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வந்த சுகாதாரத் தொழிலாளர்கள் சம்பளப் பிரச்சினை காரணமாக கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதியிலிருந்து கடமைக்கு சமுகமளிக்காமல் உள்ளனர்.

வெளிவாரி அடிப்படையிலான சுகாதாரத் தொழிலாளர்கள் கடமைக்கு சமுகமளிக்காமையால் வட்டாரங்களில் வேலைகள் தேங்குகின்றன. அத்துடன் தற்போது மாரிகாலம் என்பதனால் டெங்கு ஒழிப்பு உள்ளிட்ட வேலைகளிலும் ஈடுபட முடியாத நிலை காணப்படுகிறது.

இதனை சாவகச்சேரி நகரசபை உணர்ந்து அவர்களை மீண்டும் கடமைக்கு அமர்த்தி அவர்களுடைய சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்காலத்தில் அவர்களை நகரசபையின் நிரந்தர சுகாதாரத் தொழிலாளர்களாக உள்ளீர்ப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண் டும் எனவும் தெரிவித்தார். (5-4-30)

# மாநகர சபை பதிவேட்டில் பெயர் இல்லாமல் இருக்கும் பூங்கா

(நல்லூர்)

மாநகர சபை பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்படாமல் இருக்கும் பூங்காவிற்கு வருங்காலத்தில் கிட்டுபூங்கா என பெயர் சூட்டுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், என்னைப் பொறுத்தவரை அது சங்கிலியன் பூங்கா அல்ல கிட்டு பூங்கா.

மாநகர சபையின் பதிவேட்டின் பிரகாரம் தற்போது பெயர் இல்லாமலேயே அது இருக்கின்றது. வருங்காலத்தில் கிட்டு பூங்கா என பெயர் வருவதற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. மறுப்பதற்கில்லை.

புனரமைப்புப் பணிகளை நகர அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்றிருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. அவ்வாறு இல்லையெனின், மாநகர சபை உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-33)

# ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர்களின் செயற்பாடு

(கரணவாய்)



கொவிட்-19 காரணமாக உருவாகியுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கங்களின் சமூகநல திட்டங்களின் கீழ் கல்லூரியில் கல்வி பயில்கின்ற, பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களின் குடும்பங்களுக்கு 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் முல்லைத்தீவு, விசுவமடு கிராமத்தை சேர்ந்த ஒரு தொகுதி குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் மற்றும் வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்கன் மிசன் பாடசாலை, செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களின் குடும்பங்களுக்கும் 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

உலகளாவிய ரீதியில் இருக்கும் ஹாட்லிக்கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கங்களை இணைத்து, அனைத்துலக பழைய மாணவர்கள் சங்கமாக இணைத்ததன் பின்னர் பல்வேறு சமூக நலன் நோக்கிய திட்டங்களை செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (5-4-60)

# கோழி இறைச்சி விற்பனை செய்யத்தடை

(நல்லூர்)

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பொதுச் சந்தைகள் தவிர்ந்த பகுதிகளில் கோழி இறைச்சி விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

வலி. வடக்கு பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட பொது சந்தைகளில் மாத்திரமே கோழிகளை உரித்து இறைச்சியாக்கி விற்பனை செய்ய முடியும் எனவும் , சபையின் ஆளுகைக்கு உட்பட்ட ஏனைய பகுதிகளில் உரித்து இறைச்சி விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந் நடைமுறை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனவும் , மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (5-4-33)

# இந்திய துணைத் தூதரக அதிகாரியை யாழ்.மாநகர முதல்வர் சந்தித்தார்




(நல்லூர்)

யாழ் மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனுக்கும் யாழ்.இந்திய துணைத்தூதரகத்தின் அதிகாரி கிருஷ்ணமூர்த்திக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்பொன்று இடம் பெற்றது.

குறித்த சந்திப்பின் போது இந்திய அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் கலாசார மத்திய நிலையத்தை, யாழ்.மாநகர சபை பொறுப்பேற்பது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டதாக முதல்வரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்திப்பின் போது வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானமும் உடனிருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-33)



கொக்குவில் மேற்கு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் புதுவருட பிறப்பு தினத்தன்று 01.01.2021 யாழ்.மாநகர முதல்வராக தெரிவு செய்யப்பட்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆலய தர்மகர்த்தா செல்வி கோமதி சுப்பையாவினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# கடமைகளை ஆரம்பிக்கும் ஆளுநர் அலுவலகம்



(நல்லூர்)

2021ஆம் ஆண்டின் அலுவலக கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களில் அரசாங்க அதிபர்கள், வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், ஐந்து மாவட்டத்தின் பாதுகாப்பு படைதளபதிகள், வடக்கு மாகாண பொலிஸ்மா அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், மாநகர முதல்வர் என பலரும் கலந்து கொண்டனர். (5-33)

# மகப்பேற்று மருத்துவ சங்கத்தின் தலைவராக விசேட வைத்திய நிபுணர் பிரதீப்



(கொழும்பு)

இலங்கை மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவ சங்கத்தின் 35ஆவது தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரதீப் டி சில்வாவை, அப்பதவிக்கு நியமிக்கும் நிகழ்வு, இடம்பெற்றது.


பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பங்குபற்றுதலுடன் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டப வளாகத்தின் தாமரை மண்டபத்தில் மேற்படி நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

தெற்காசியாவில் தாய், சேய் இறப்பு விகிதம் மிகக் குறைந்தளவு பதிவாவது இலங்கையிலாகும். சுகாதார அமைச்சின் அனுசரணையில் இலங்கை மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவ சங்கம் இவ்விடயத்தில் சிறப்பான பங்களிப்பை செய்து வருகிறது.

இலங்கை மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவ சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் 35ஆவது நிர்வாகத் தலைவரின் நியமனம் இடம்பெற்றது.

குறித்த சந்தர்ப்பத்தில் பிரதமரின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்த்தன, முன்னாள் தலைவர் விசேட வைத்திய நிபுணர் யூ.டீ.பீ.ரத்னசிறி, செயலாளர் விசேட வைத்திய நிபுணர் சாமிந்த மாதொட உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (நி-4)

## கஜ முத்துக்களுடன் கைது



(மாத்தறை)

மாத்தறை பகுதியில் ஆறு கஜ முத்துகளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மாத்தறை பகுதியில் நேற்று பொலிஸ் விசேட அதிரடைப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமான முறையில் கஜ முத்துக்களை விற்பனை செய்ய முற்பட்ட சந்தேக நபரொருவர் கைது செய்யப்படடுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு எதிராக வன ஜீவராசிகள் பாதுகாப்பு மற்றும் மோசடி சட்டவிதிகளுக்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. (நி-4)




## புனரமைப்பு வேலைகள் செய்ய வழி பிறக்குமா?

தென்மராட்சிப் பிரிவிலுள்ள கொடிகாமம் பிரதேச சபைக்குட்பட்ட அல்லாரைக் கிராமத்தின் வடக்குப் பக்கத்தில் 'அல்லாரைத் தாழ்வு' என்ற பெயரில் ஒரு குளமுள்ளது.

இக்குளம் ஒவ்வொரு வருடமும் நீர் நிரம்பி சுற்றாடலிலுள்ள மக்களுக்குப் பெரும் சிரமத்தைக் கொடுப்பது வழக்கம். அண்மையில் ஏற்பட்ட புரேவி புயலுடன் கூடிய மழையினால் நீர் நிரம்பி குளம் எங்கே? அணைக்கட்டு எங்கே? என்று தெரியாதளவிற்கு பெரும் நிலப்பரப்பில் நீர் காணப்படுகிறது.

இதனால் அப்பகுதியிலுள்ள பல குடியிருப்பாளர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். தென்னை உற்பத்தியாளரும் சிறு தானியம் பயிரிடுவோரும் பாதிப்படைந்துள்ளனர். இக்குளத்தின் அருகேயுள்ள இரு வீதிகள் பயணம் செய்ய முடியாதளவிற்குத் தடைப்பட்டுள்ளன.

வருங்காலங்களிலும் இத்தகைய பாதிப்புகள் ஏற்படாமலிருக்க இக்குளத்தை ஆழமாக்கி அணைக்கட்டை உயர்த்தினால் நீர் குளத்தினுள்ளேயே நின்று கொள்ளுமென இக்கிராம மக்கள் கருத்துரைக்கின்றனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒருமுறை நேரில் வந்து பார்த்து இதற்கான புனரமைப்பு வேலைகள் செய்ய வழிவகுப்பார்களா?

பாதிக்கப்பட்ட மக்கள்,
கொடிகாமம்.

# சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை


**அஜித் ரோஹண**

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக உரிய சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத நிறுவனங்கள், காரியாலயங்கள் மற்றும் சேவை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

புதுவருடப்பிறப்பை அடுத்து நிறுவனங்கள் , காரியாலயங்கள் மற்றும் சேவை நிலையங்கள் மீண்டும் வழமையை போன்று தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. இவ்வாறு வழமைக்கு திரும்பியுள்ள நிறுவனங்களில் சுகாதார வழிமுறைகள் முறையாக கடைப்பிடிக்கப்படுவதில்லை என்று பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அத்தகைய தொழில் நிலையங்கள் தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்தி வருகின்றனர். அதற்கமைய கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் கைகளை சுத்தம் செய்து கொள்வதற்கும் நிறுவனங்களுக்கு வருகைதரும் நபர்களின் விபரங்களை பதிவுச் செய்வதற்கும் உடல் வெப்பநிலையை அளவிடுவதற்குமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் உட்பட ஏழு சுகாதார வழிமுறைகளை இந்த தொழில் நிலையங்கள் பின்பற்ற வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்த விதிமுறைகளை கடைப்பிடிக்காத தொழில் நிலையங்கள் மற்றும் அதன் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டவிதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியதும் கட்டாயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)




கலந்துரையாடலில்...

| அச்சகத்துறையினரின் பிரச்சனைகான தீர்வு.

| தொழில்நுட்ப உதவிகள். சந்தேகங்கள்.

| எதிர்கால அச்சுத்துறை.

அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இக்கலந்துரையாடலுக்கான அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளமையினால் உடனடியாக தங்களை பதிவு செய்து கொள்ளவும்.

SEMINAR ON ZOOM

Date 09th JANUARY 2021

Time 10.00 AM TO 11.00 AM

Investment Free/இலவசம்

Medium தமிழ்

முன்பதிவுகளுக்கு

Leonard@srilankaprinters.com
M: 077 737 4619



Facilitator
Dr. TKS Lakshmi Priya
India

உ
நாகபூஷணி அருளுடன்

**தோல்வி நிலையானது அல்ல வெற்றி நிச்சயிக்கப்பட்டு விட்டது**

மார்கழி மாத பரிசுமழை N.L.B.யின் "மகஜன சம்பத" வழங்கிய

**31.12.2020 அன்று 2000000 (இருபது இலட்சம்) வெல்லப்பட்டது.**


யாழ்.விற்பனை முகவர் S.கனகலிங்கம் திலகவதி

அந்த மாதத்தில் ஒரு இலட்சம் பரிசுகளும் பல வெல்லப்பட்டுள்ளன. எனவே நீங்களும் இலட்சாதிபதியாக N.L.B.யின் மகஜன சம்பத, கொவிசெத, வாசன சம்பத, ஜாதிக சம்பத, சுப்பிரி வாசன, மெகாபவர் தன நிதானய மற்றும் DLB யின் சனிதா, ராசி அதிர்ஷ்டம் சுப்பர் போல், அதகோடிபதி, ஜயோதா, அபிவிருத்தி அதிர்ஷ்டம் சசிரி போன்ற பரிசு சீட்டுகளை வாங்கி வெல்லுங்கள் நகரமெங்கும் விற்பனை விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன்

**யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதி இல.4 இல் (சத்திரசந்தி அருகில்) பிரதான முகவர்கள் S.கனகலிங்கம் திலகவதி பரிசு சீட்டு விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.**

அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம் N.L.B (5173) வளமான வாழ்விற்கு D.L.B

## யானைகள் அட்டகாசம் பிள்ளையார் ஆலயம் சேதம்



(அக்கராயன்)


முல்லைத்தீவு துணுக்காய் அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அம்பலப்பெருமாள் குளம் பிள்ளையார் ஆலயம் யானைகளினால் சேதமாக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த மூன்று மாத காலமாக யானைகளின் தொல்லைகளை எதிர்கொள்கின்ற கிராமங்களில் அம்பலப்பெருமாள்குளம் கிராமம் முதன்மையானது.

அம்பலப்பெரு மாள்குளத்தின் நடுவால் நீந்தி அணைக்கட்டில் ஏறி அணைக்கட்டினை சேதப்படுத்துதல், குளத்தின் கீழுள்ள வயல்களை அழித்தல், தென்னை, வாழை மரம் போன்ற பயன்தரு மரங்களை சேதப்படுத்துதல் என தொடர்கின்ற யானைகளின் தொல்லைகளைத் தொடர்ந்து பிள்ளையார் ஆலயம் சேதமாக்கப்பட்டுள்ளது. (5-4-350)

## கருணாவைச் சந்திக்கச் சென்ற நபர் பொலிஸாரால் கைது



(முறிகண்டி)

கூரிய ஆயுதங்களுடன் கருணாவைச் சந்திக்க சென்ற நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


நேற்றைய தினம் முரசுமோட்டை பகுதியில் தங்கியிருந்த கருணாவைச் சந்திக்கச் சென்ற நபரைக் கடமையில் நின்ற பொலிஸார் சோதனைக்குட்படுத்திய வேளை அவரிடமிருந்து குறித்த கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

குறித்த நபர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த கத்தி மற்றும் அரிவாள் ஆகியவற்றை வயலிற்கு பசளை இடுவதற்காக எடுத்து சென்றதாகவும் திரும்புகையில் கருணாவைச் சந்தித்துச் செல்ல சென்றதாகவும் குறித்த சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. (5-4-100)

## விபத்தில் மாடுகள் பலி



(கண்டாவளை)

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதான வீதியில் டிப்பர் வாகனத்தில் மோதி 3 மாடுகள் உயிரிழந்துள்ளன.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் முள்ளியவளை பகுதி வீதியில் பயணித்துக்கொண்டிருந்த டிப்பர் வாகனம் மோதியதில் மூன்று மாடுகள் உயிரிழந்துள்ளன.

இரவு வேளைகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளே இவ்வாறு விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளன. (5-4-315)

## கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் படுகாயம்

(தருமபுரம்)

முல்லைத்தீவு, விசுவமடு ரெட்பானாக்காட்டுப் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

விசுவமடு ரெட்பானாப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் நேற்று அதிகாலை காட்டுக்குச் சென்ற சமயம் மிருகங்களுக்காக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-316)

## பரிசோதனையில் தொற்று உறுதி சில பகுதிகள் முடக்கம்

(நெளுக்குளம்)

அன்ரிஜன் பரிசோதனையில் கர்ப்பிணி பெண் ஒருவர் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட நிலையில் வவுனியா வேப்பங்குளம், பட்டாணிச்சூர் உள்ளிட்ட சில பகுதிகள் பொலிஸாரால் முடக்கப்பட்டுள்ளன.

வவுனியா பட்டாணிச்சூர் முதலாம் ஒழுங்கையில் வசித்த கர்ப்பிணிப்பெண் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு அன்ரியன் பரிசோதனை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

அதில் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து குறித்த பெண்ணின் இருப்பிடமான வவுனியா பட்டாணிச்சூர் முதலாம் ஒழுங்கை மற்றும் 2,3,4,5 ஆம் ஒழுங்கை பகுதிகள் மற்றும் வேப்பங்குளத்தின் சில பகுதிகள் பொலிஸாரால் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பெண்ணுக்கு அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டபோதே தொற்று இருப்பது தெரியவந்துள்ளது.

எனினும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் குறித்த பெண் வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

பி.சி.ஆர்.முடிவுகள் கிடைக்கப்பெற்றதும் ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் காண்டீபன் தெரிவித்துள்ளார். (5-4-299)

## நூலகங்களை இயக்க நடவடிக்கை முன்னெடுப்பு



(அக்கராயன்)


கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள நூலகங்களை இயக்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வன்னேரிக்குளத்தில் அக்கராயன் சமுதாய அபிவிருத்தி குழுமத்தின் பொருளாளர் ச.சுஜிகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கரைச்சி பிரதேச சபையின் வன்னேரிக்குளம் வட்டார உறுப்பினர் நா.செல்வநாயகம், அக்கராயன் வட்டார உறுப்பினர் சு.தயாபரன், அக்கராயன் கிராம உத்தியோகத்தர் ப.சபாரத்தினம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி வன்னேரிக்குளம் நூலகத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு எதிர்வரும் தைபூசத்தில் நூலகத்தினை இயக்குவது என் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ஆனைவிழுந்தான் கிராமத்திலுள்ள நூலகத்தினை இவ்வாரம் இயக்குவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது. வன்னேரிக்குளம் வட்டாரத்தில் இரு நூலகங்களும் தனித்தனியாக இயங்க உள்ளன. கரைச்சிபிரதேச சபையின் மேற்பார்வையில் மேற்படி நூலகங்கள்தொடர்ந்து இயங்கும்என இக்கலந்துரையாடலில் தீர்மானங்கள்எடுக்கப்பட்டுள்ளன.(5-4-350)

## நெல் உலரவிடும் தளங்கள் அமைத்துத்தரக் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் உலரவிடும் தளங்களுக்கான பற்றாக்குறை காணப்படுவதன் காரணமாக விவசாயிகள் உலராமலே நெல்லினை குறைந்த விலையில் விற்கின்ற அவலநிலை தொடர்கிறது.

மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் அடிக்கடி இப்பிரச்சினை முதன்மை பிரச்சினையாக கலந்துரையாடப்படுகின்ற போதிலும் தீர்வுகள் எட்டப்படுவதில்லை.

இதன் காரணமாக விவசாயிகள் தொடர்ச்சியாக நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். குறைந்தது ஒவ்வொரு கமக்கார அமைப்பின் கீழும் மூன்று நெல் உலரவிடும் தளமாவது அமைக்கப்பட வேண்டும்.

ஆனால் பலகிராமங்களில் நெல் உலரவிடும் தளங்களே அமைக்கப்படாததன் காரணமாக வீதிகளிலும் நெல்லினை உலரவிடுகின்ற அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை அறுவடை காலங்களில் நெல்லினை உலரவிட முடியாததன் காரணமாக வியாபாரிகளுடன் பேரம் பேச முடியாத நிலையில் விவசாயிகள் நெல்லினை குறைந்த விலையில் விற்பனை செய்கின்ற நிலைமை காணப்படுகிறது.

இப்பிரச்சினைகளுக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நிரந்தரதீர்வு பெற்றுத்தர வேண்டும் என்பது விவசாயிகளின் தொடர்ச்சியான கோரிக்கையாகும். (5-4-350)

## இராசிபலன்

05.01.2021
மார்கழி 21, செவ்வாய்க்கிழமை
சப்தமி பின்னிரவு 3.16 மணிவரை
உத்தரம் மாலை 5.55 மணிவரை
சுபநேரம் 11.01-12.31 மணிவரை
இராகுகாலம் 3.31-5.01 மணிவரை
சந்திராஷ்டமம் சதயம், பூரட்டாதி
அமிர்தசித்தம்

வளவன்

**மேஷம்** – சூழ்நிலைக்கேற்ப மாறிக் கொள்வீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** – பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** – தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

**கடகம்** – புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்** – வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** – பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** – நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** – பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** – பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், குடும்ப ஒற்றுமை கூடும்.

**மகரம்** – குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், அரைகுறையாக இருந்த பணிகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்** – மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நீங்கள் நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மீனம்** – உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்

# தகனப் பிரச்சினை குறித்து ஆராய எந்தக் குழுவும் நியமிக்கப்படவில்லை

**(கொழும்பு) கொரோனாவினால் உயிரிழந்தவர்களை தகனம் செய்வது தொடர்பான விவகாரத்தில் பரிந்துரைகளை வழங்க ஒரு குழுவை நியமிப்பது குறித்து வெளியான செய்திகளில் எந்த உண்மையும் இல்லை என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களை தகனம்செய்தல் அல்லது அடக்கம் செய்வது குறித்து ஆராய்வதற்கு குழு ஒன்றினை நியமித்துள்ள தாக செய்திகள் வெளி யாகியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# நோய்க்கட்டுப்பாடு குறித்த முடிவுகளுக்கு நம்பிக்கையல்ல; அறிவியலே அடிப்படை




(கொழும்பு)

கொவிட் -19 கட்டுப்பாடு எப்போதும் அறிவியலை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

அதே நேரத்தில் நோய் கட்டுப்பாடு குறித்த முடிவுகளை எடுக்கும்போது மதம், இனம், அரசியல், சமூக மற்றும் புராண நம்பிக்கைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொரோனா தொற்று ஒரு புதிய நோய் என்பதால் உலக சுகாதார அமைப்பின் ஆரம்ப பரிந்துரைகள் மாற்றமடைவதாகவும் இந்நிலையில் இந்த நோய் குறித்து அவ்வப்போது பரிந்துரைகளை வழங்குமாறு நிபுணர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகளிடம் அவர் கேட்டுக்கொண்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# பாராளுமன்ற வரலாற்றில் ஒரே நாளில் அதிகளவான திருத்தச் சட்டங்கள்



(கொழும்பு)

இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் இன்று அதிகளவான திருத்தச் சட்டங்கள் ஒரே தினத்தில் கொண்டு வரப்படவுள்ளதாக பாராளுமன்றத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சாட்சியங்கள் கட்டளைச் சட்டம், பிணை சட்டம், குற்றவியல் தண்டனை சட்டம், அலுவலகம் மற்றும் கடைகள் சட்டம், தொழிற்சாலைகள் சட்டம், சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவது தொடர்பான சட்டம், குறைந்தபட்ச சம்பளம் தொடர்பான சட்டம் ஆகியவற்றிக்கான திருத்தச் சட்டங்கள் இன்று கொண்டு வரப்படவுள்ளதாகத தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

# 600 மில்லியன் பெறுமதியான போதைப்பொருள் கடற்பகுதியில் கைப்பற்றப்பட்டது



(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு கடற்பகுதியில் ஆழ் கடல் மீன்பிடிப் படகொன்றில் இருந்து பாரிய அளவிலான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த ஆழ் கடல் மீன்பிடிப் படகிலிருந்து 100 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் 80 கிலோ கிராம் ஹஷிஸ் போதைப்பொருள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

மேலும் கைப்பற் றப்பட்ட போதைப்பொருட்கள் சுமார் 600 மில்லியன் ரூபாய் பெறுமதியானவை என கடற் படை அறிவித்துள்ளது. (நி-4)

## உலகில் முதன்முறையாக

# வைரஸின் மரபணுவைப் பிரித்தெடுத்து இந்திய விஞ்ஞானிகள் சாதனை

(டில்லி)

**பிரிட்டனில் வேகமாக பரவி வரும் புதிய கொரோனா வைரஸின் மரபணுவை பிரித்தெடுத்து இந்திய விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.**

பிரிட்டனில் கொரோனா வைரஸின் மரபணு மாற்றம் பெற்ற புதிய வைரஸ் அடையாளம் காணப்பட்ட நிலையில், தற்போது உலகெங்கும் பல் வேறு நாடுகளில திரிபடைந்த புதிய வைரஸ் பரவி வருகிறது.

புதிய திரிபு கொரோனா வைரஸ் 70 வீதம் வேகமாகப் பரவக்கூடியது என சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ள நிலையில் இது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.


இந்தப் புதிய கொரோனா வைரஸின் மரபணு குறித்து சர்வதேச அளவில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்திய மருத்துவ ஆராய்ச்சிபேரவை உலகில் முதல்முறையாக புதிய வகை கொரோனா வைரஸின் மரபணுவை தனியாகப் பிரித்தெடுத்துள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் உள்ள தேசிய நுண்ணுயிரியல் ஆய்வு நிறுவன விஞ்ஞானிகள் இந்தச் சாதனையைப் படைத்துள்ளனர்.

பிரிட்டனில் இருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்த கொரோனா நோயாளிகளின் மாதிரிகளில் இருந்து புதிய வகை வைரஸின் மரபணு பிரித்தெடுக்கப்பட்டுள்ளதாக இந்திய தேசிய நுண்ணுயிரியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. புதிய திரிபு வைரஸ் குறித்த ஆய்வுகளைத் துரிதப்படுத்த இந்திய விஞ்ஞானிகளின் இந்தச் சாதனை உதவும் எனக் கருதப்படுகிறது. (நி-4)

# இரத்தக் கறையுடன் தரையிறங்கிய விமானம்



(அங்காரா)

துருக்கியில் சரக்கு விமானம் ஒன்று புறப்பட்ட சிறிது நேரத்திலே இரத்தக் கறையுடன் அவசரமாகத் தரையிறங்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. துருக்கி சரக்கு விமானமான TK-6220 இஸ்தான்புல் அடாடர்க் விமான நிலையத்திலிருந்து கஜகஸ்தான் நகரத்திற்குப் புறப்பட்டது.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் பறவைகள் கூட்டமாக மோதியுள்ளது. விமானம் சேதமடைந்ததை அடுத்து விமானி, அடாடர்க் விமான நிலையக் கட்டுப்பாட்டு அறையைத் தொடர்பு கொண்டு அவசரமாகத் தரையிறக்க வேண்டும் எனத் தகவல் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, விமானம் அடாடர்க் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

பறவைகள் விமானத்தின் மீது மோதியதில் முன் பாகம் சேதமடைந்துள்ளது. மேலும் விமானத்தின் மீது மோதிய பறவைகளின் இரத்தக் கறைகள் இருந்தன.

தரையிறக்கப்பட்ட விமானம் பராமரிப்புக்காக இழுத்துச்செல்லப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். (நி-4)

# பிறப்புக்களை விட அதிகரித்த இறப்புக்கள்

(சியோல்)

கடந்த 2020 ஆம் ஆண்டில் தென்கொரியா முதல் தடவையாக பிறப்புகளை விட அதிகமான இறப்புகளைப் பதிவு செய்துள்ளது.

இது ஏற்கனவே உலகின் மிகக் குறைந்த பிறப்பு விகிதத்தைக் கொண்ட நாட்டில் புதிய எச்சரிக்கையை எழுப்பியுள்ளது. குறைந்து வரும் சனத்



தொகை ஒரு நாட்டிற்கு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. (நி-4)

# கொவிட்-19 தொற்றிலிருந்து ஆறுகோடிக்கும் மேற்பட்டோர் மீண்டுள்ளனர்

(ஜெனிவா)

உலக அளவில் கொரோனா வைரஸ் பெருந் தொற்றிலிருந்து ஆறு கோடிக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி, இதுவரை ஆறு கோடியே நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் மீண்டுள்ளனர்.

அத்துடன் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றினால் மொத்தமாக எட்டு கோடியே 55 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரை 18 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த முதல் நாடாக அமெரிக்கா விளங்குகின்றது.

இதற்கு அடுத்தபடியாக அதிக பாதிப்பினை எதிர்கொண்ட நாடாக இந்தியா, பிரேஸில், ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன. (நி-4)

# இறுதிச்சடங்கில் கலந்து கொண்டோருக்கு எமனான கூரை - உ.பியில் சோகம்




(டில்லி)

இந்தியாவின் உத்தரபிரதேசத்தின் முராத்நகரிலுள்ள தகன மயானத்தில் அமைந்துள்ள தங்குமிடம் ஒன்றின் கூரை இடிந்து வீழ்ந்ததில் குறைந்தது 23 பேர் உயிரிழந்ததுடன், 15 பேர் காயமடைந்தும் உள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உள்ளூர்வாசியொருவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள பெரும்பாலான மக்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த மயானத்திற்கு வந்திருந்தனர்.

இதன்போது தொடர்ந்து பெய்த அடை மழை காரணமாக இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட பலர் கட்டடத்திற்குள் ஒதுங்கியுள்ளனர். இதன்போதே கூரை இடிந்து வீழ்ந்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கிய 23 பேர் உயிரிழந்ததுடன், ஏனைய 15 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டும் உள்ளனர். அதே நேரம் மீட்புப் பணிகள் இன்னும் நடந்து கொண்டிருப்பதாக தேசிய பேரிடர் மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். (நி-4)



**துபாய் பட்டத்து இளவரசர் தனது குழுவினருடன் சைக்கிளில் பயணம் செய்து கொண்டு இருந்தார். அப்போது திடீரென்று 2 நெருப்புக்கோழிகள் அவரது சைக்கிள் பாதைக்கு இணையாக ஓடின. இந்தக் காட்சியை அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். தற்போது இந்த வீடியோ காட்சி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. இந்த நெருப்புக்கோழியானது மணிக்கு 70 கி.மீ வேகத்தில் செல்லக்கூடியது என்பது வியப்பூட்டும் தகவலாகும்.**

# மாமனிதர் அமரர் குமார் பொன்னம்பலம்



**20 வது ஆண்டு நினைவு தினத்திற்காக இக்கட்டுரை பிரசுரமாகிறது**

ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஓர் அத்தியாயம் மாமனிதர் குமார் பொன்னம்பலம். 2000 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி கொழும்பில் படுகொலை செய்யப்பட்டு இன்று இருபது ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் அவரை தமிழ் பேசும் மக்கள் எளிதில் மறக்கமாட்டார்கள். ஈழத்தமிழர் விடுதலை வேள்வியில் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து உழைத்து செயற்பட்டு கொண்டிருக்கும் வேளையில் அவரை நாம் இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிகழ்வு ஏற்பட்டது. அவருடைய தந்தையார் ஜீ.ஜீ.பொன்னம்பலம் இலங்கை வரலாற்றில் ஒப்பாரும், மிக்காரும் அற்ற வழக்கறிஞர். தமது வழக்குரைக்கும் திறமையை தென் கிழக்கு ஆசியா எங்கும் பதித்த மதியூகி.

தமது ஆங்கில நாவன்மையால் ஐக்கிய நாடுகள், ஸ்தாபனத்தை கலக்கியவர். 1947இல் சோல்பரி கமிஷன் முன் வாதிட்ட விடயங்கள் அனைவராலும் பாராட்டப்பட்டது. ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் சிங்கள மேலாதிக்கம் எப்படி தொழிற்படும் என்பதை உணர்ந்து "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்ற கோசத்தை முழங்கச் செய்தார். சிங்கள மக்களுக்கும் சிறுபான்மை" மக்களுக்கும் ஐம்பதுக்கம்பது என்ற கோரிக்கையை கொணர்ந்தவர். அதேவழியில் சட்டத்துறையிலும், அரசியலிலும் செயற்படுவதற்கு தமது புத்திரர் குமார் பொன்னம்பலத்தையும் வழி நடத்தினார்.

அமரர் குமார் பொன்னம்பலம் தந்தையார் மறைந்த பின் தமிழ் காங்கிரஸ் கட்சியை பொறுப்பேற்று வளர்த்தெடுத்தார். புகழ்பெற்ற வழக்கறிஞர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்துப்பட்டம் பெற்றதோடு பாரிஸ்ரர் பட்டமும் பெற்றார். இவர் தமிழ் மக்களின் துயர்துடைப்பதற்காக பல வழக்குகளில் வாதாடி வெற்றிபெற்றார். செம்மணி புதைகுழிகள் பற்றிய செய்திகள் வெளிவருவதற்கு காரணமாக இருந்த கிருஷாந்தி பாலியல் வல்லுறவு வழக்கு, மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை படுகொலைகள் சம்பந்தப்பட்ட விசாரணைகளின் போது கொடுமைகள் புரிந்த இலங்கை இராணுவத்திற்கு எதிராக வாதிட்டு பல உண்மைகளை வெளிக் கொணர்ந்தவர்.

1996 இல் பயங்கரவாத தடைச்சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் வழக்குகளை ஆஜராகுபவர்கள் பயங்கரவாதிகள் என்று மகுடம் சூட்டப்பட்ட வேளையில் தாம் தமிழீழவாதி எனக்கூறி எவ்வித லாபமும் கருதாமல் வழக்காடியவர் குமார் பொன்னம்பலம். அது மாத்திரமன்றி சிறைகளில் வாடும் பிஞ்சு உள்ளங்கள் குமார் அண்ணை எங்களை காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் அவர்களிடமிருந்தது. 1983 ஆம் ஆண்டு நாட்டை உலுக்கிய பயங்கர வன்முறை தமிழ் மக்களினது வாழ்க்கை நிலைகுலையலைத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப் படுவதும் காணாமல் போவதும் அதிகரித்தன. சித்திரவதைகளும், பாலியல் வல்லுறவுகளும், கொலைகளும் சாதாரணமாக நடைபெற தொடங்கியது. பயங்கரவாத எதிர் நடவடிக்கை என்று தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட உரிமை மீறல்களை தட்டிக் கேட்க யாரும் முன் வரவில்லை. நீதிமன்றத்தில் வாதாடி நியாயம் பெற்றார். பேரினவாதிகளின் எதிர்ப்புகளை செவி மடுக்காது கொழும்பில் தமது குடும்பத்துடன் வாழ்ந்து கொண்டு சிங்கத்தின் குகையிலிருந்து உறுமிய புலிபோல செயற்பட்டார். ஏனைய சட்ட வல்லுநர்கள் போல் வசதியாக, ஆடம்பரமாக வாழ நினைத்திருந்தால் வாழ்ந்திருக்கலாம். அதை விடுத்து எந்நேரமும் ஈழத்தமிழ் மக்களை சிந்தித்து பாராளுமன்ற உறுப்பினராக இல்லாவிடினும் வெளியே சிறப்பாக செயலாற்றினார்.

உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் இனப்பிரச்சினை உண்மை சொரூபத்தை, தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் அடக்கு முறைகளை வெளிப்படுத்தலிலும் பெரும் பங்காற்றியவர். சர்வதேச அளவில் நடைபெறும் மனித உரிமை மகாநாடுகள், கருத்தரங்குகள் பலவற்றில் கலந்து கொண்டு தமது சிறந்த ஆங்கில புலமையூடாக புள்ளிவிபரங்களோடு இனப் பிரச்சினைகளின் பல்வேறு பரிணாமங்களையும் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தினார். இதன் காரணமாக அதிகார சக்திகளின் பலத்த கண்டனத்திற்கும், விமர்சனத்திற்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளானார். அதிகாரப்பீடத்தை மட்டுமல்ல அதற்குப் பக்கபலமாக இருந்த தமிழ் கட்சிகளையும் அவர் கடுமையாக சாட்டினார்.

எங்களுக்குரிய உரிமைகளை அனுபவிக்க யாரிடமும் கைகட்டி நிற்கவோ, கெஞ்சிக் கேட்கவோ வேண்டிய அவசியமில்லை என்று உரக்கக் கூறியவர். தமக்கு உயிர் ஆபத்து இருக்குதென்று தெரிந்து கொண்டும் சளைக்காது தமிழ் மக்களுக்கு நியாயம் வேண்டி செயற்பட்டவர்.

சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக தன்னந்தனியே குரல் கொடுத்தவர். அரசியல் செய் வோர் மிகுந்த பாதுகாப்புடன் நடமாடிய போதும் அவர் எவ் விதப் பாதுகாப்பும் இன்றி செயற்பட்டவர்.

எதிர்காலத்தில் நில அபகரிப்புக்கள் தமிழ்மக்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிபோகும் நிலை போன்ற பல ஆபத்துக்கள் இருப்பதை தீர்க்கதரிசியாக சொல்லி வந்தவர். அனைவரும் துணிவாக செயற்பட வேண்டும் என்று கூறிய தீர்க்கதரிசி.

நீதிக்காகவும், சமாதானத்திற்காகவும், சமூக விடுதலைக்காகவும் உயிருக்கும் அஞ்சாது தம்மையே அர்ப்பணித்த அவரது வாழ்வு சிறப்பானது. கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் துணைத் தலைவராக இருந்து சிறிது காலம் செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**— ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி —**

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் பொய்யாக்கியுள்ளது

**(கொழும்பு)**

**கொழும்பு துறைமுகத்தின் இரண்டு பிரதான முனையங்களை அரசாங்கம் இந்தியாவுக்கும், சீனாவுக்கும் 5 வருட காலத்துக்குள் தாரைவார்த்து விடும் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**



மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் அமைச்சரவை யோசனையை கப்பற்துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ளார்.

அமைச்சரவை யோசனையில் எவ்விதமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை பொறுப்பான அமைச்சர் கூட அறிந்திருக்கமாட்டார்.

அமைச்சரவை யோசனையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை அரசாங்கத்தினால் நாட்டு மக்களுக்கு பகிரங்கப் படுத்த முடியுமா என்ற சவாலை முன்வைக்கிறோம்.

கடந்த அரசாங்கம் பிற நாட்டவர்களுக்கு விற்ற தேசிய வளங்களை ஆட்சிக்கு வந்த பிறகு மீள பெறுவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் அரசியல் பிரசாரம் செய்தார். ஆனால் தற்போது அரசாங்கம் இந்தியாவுக்கு அடிபணிந்துள்ளது.

தேசிய முதலீட்டாளர்களுக்கு கிழக்கு முனையத்தை வழங்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது.

இந்தியாவுக்கு கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் அவசியம். ஆகவே அதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தேசிய வளங்களை பாதுகாப்போம் என நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் பொய்யாக்கியுள்ளது. (நி-4)

## விடுவிக்கப்பட்டது மாளிகாவத்தை தொடர்மாடி

(கொழும்பு)

நாட்டில் தனிமைப்படுத்தலில் இருந்து நேற்றுக் காலை சில பகுதிகள் விடுவிக்கப்பட்டன. அவ்வாறு விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மாளிகாவத்தை தேசிய தொடர்மாடிக் குடியிருப்புப் பகுதியும் உள்ளடங்குவதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (நி)

## இருவர் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் - ருவன் வெலிசாய பிரதான பலி பீடத்தில் வைக்கப்பட்டுள்ள "அட்டபிரிகர" எனும் பிக்குகளின் மத அனுட்டானம் தொடர்பான பொருட்களைக் களவாடிய இரு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரில் ஒருவர் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-4)

## யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதி 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு-கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்"ற்கு அமைய யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 20.02.2020 ம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல 2163/17 இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என் மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் துணைவிதியின் பிரிவு 23 ற்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- கிளை 16 மற்றும் கிளை 24 இற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள கிளை பொதுச்சபை கூட்டத்திற்கான அறிவித்தல்களில் 09.01.2021 சனிக்கிழமை என்பது தவறுதலாக செவ்வாய்க்கிழமை என அச்சிடப்பட்டுள்ளது. 09.01.2021 சனிக்கிழமை என்பதே சரியானதாகும் என்பதனை குறித்த கிளைகளின் அங்கத்தவர்களுக்கு தெரியப்படுத்துவதுடன் குறித்த நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
- முகவரி மாற்றம் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ கிளை பொதுச்சபை கூட்டத்திற்கான அழைப்பு கடிதங்கள் கிடைக்காத வாக்களிக்க தகுதியான அங்கத்தவர்கள் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக கருதி தமக்குரித்தான கிளை பொதுச்சபை கூட்டம் நடைபெறும் இடத்திற்கு குறித்த நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
- கிளைப்பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கான சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25பேர் இதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது(09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

| தொ. இல | தவிசாளர் பெயர் | கிளை பெயர் | கிளை இல | காலம் | நேரம் காலை | கிளை பொதுச்சபை கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு சிங்கராசா சியாந்தன் | முஸ்லிம் தெரு | 3C | 09.01.2021 | 10.00மணி | அறிவொளி சனசமூக நிலையம் ஆறுகால்மடம் |
| 2 | திருமதி புவிராஜ் தர்சினி | ஓட்டுமடம் | 4 | 09.01.2021 | 10.00மணி | கலைவாணி சனசமூக நிலையம் ஓட்டுமடம் |
| 3 | திரு அரியரத்தினம் வசீகரன் | வண்ணார்பண்ணை | 5 | 09.01.2021 | 10.00மணி | வள்ளுவர் சனசமூக நிலையம் |
| 4 | திரு வல்லிபுரம் நிதர்சன் | யாழ்பாடி | 10 | 09.01.2021 | 10.00மணி | விநாயகர் மண்டபம் (ரசீக ரஞ்சித சபா மண்டபம்), பெருமாள் கோவிலடி, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம் |
| 5 | திரு சற்குணநேசன்.முகுந்தவேள் | நல்லூர் வடக்கு | 11 | 09.01.2021 | 10.00மணி | வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றம் செங்குந்தா சந்தை வீதி நல்லூர் |
| 6 | திரு சந்திரசேகரம் விஜயானந்தா | கைலாசபிள்ளையார் | 13 | 09.01.2021 | 10.00மணி | TCT மண்டபம் (சொர்ணாம்பிகை மண்டபம்) நாவலர் வீதி |
| 7 | திரு கனகரத்தினம் வக்சன் | ஆனைப்பந்தி | 14 | 09.01.2021 | 10.00மணி | நாவலர் கல்வி நிலையம் பருத்தித்துறை வீதி |
| 8 | திரு சுந்தரலிங்கம் அகிலன் | ஆரியகுளம் | 15 | 09.01.2021 | 10.00மணி | ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழகம்,ஸ்ரான்லி வீதி |
| 9 | திரு. இரத்தினசிங்கம் கஜேந்திரன் | நீராவியடி | 16 | 09.01.2021 | 10.00மணி | சைவ பரிபாலனசபை - நீராவியடி |
| 10 | திரு பரமசிவம் தவப்பிரியன் | புங்கன்குளம் | 17 | 09.01.2021 | 10.00மணி | அரியாலை சனசமூக நிலையம் |
| 11 | திரு கந்தசாமி சசிகரன் | அரியாலை | 20 | 09.01.2021 | 10.00மணி | அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் |
| 12 | திரு குணரத்தினம் நிசாந்தன் | கொழும்புத்துறை மத்தி | 22 | 09.01.2021 | 10.00மணி | கிளை 22, கொழும்புத்துறை மத்தி |
| 13 | திரு ஐயாத்துரை மயூரன் | பாஷையூர் | 23 | 09.01.2021 | 10.00மணி | பாசையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையம் |
| 14 | திரு சிவலிங்கம் பிரதீபன் | கொய்யாத்தோட்டம் | 24 | 09.01.2021 | 10.00மணி | கிளை 24, கொய்யாத்தோட்டம் |
| 15 | திரு மயில்வாகனம் கபிலன் | மூத்தவிநாயகர் | 26 | 09.01.2021 | 10.00மணி | மூத்த விநாயகர் சனசமூக நிலையம், மூத்த விநாயகர் வீதி நல்லூர் |
| 16 | திரு சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | சுண்டிக்குளி | 27 | 09.01.2021 | 10.00மணி | கிளை 27, சுண்டுக்குளி |
| 17 | திரு இராசையா உதயகுமார் | மவுன்கார்மல் | 31 | 09.01.2021 | 10.00மணி | குருநகர் கலாசார மண்டபம் |
| 18 | திரு.தாமோதரம்பிள்ளை தவமன்னன் | சென் அன்ரனிஸ் | 33 | 09.01.2021 | 10.00மணி | யாழ்.புனித சம்பத்தரிசியார் கல்லூரி - புனித பத்திரிசியார் வீதி |
| 19 | திரு பற்றிக் துரைராஜா றோய்டனிஸ்ரன் | சின்னக்கடை | 35 | 09.01.2021 | 10.00மணி | புனித யாகப்பர் ஆலயம் - குருநகர் |

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி சியாமளா சண்முகலிங்கம்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(c-1095)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2198

### கார்த்திகா




### முகுந்தன்




### கோபிகா




### கபிலன்

இ பாஸ் இல்லாமல்
இதயத்தில் நுழைந்தவளே?

என் - 95 மாஸ்க் அணிந்தும்
என் மூச்சில் கலந்தவளே

கடைசியில் என்னை
சானிடைசர் போட்டு கை
கழுவிச் சென்று விட்டாயே....

### பவித்திரா




### ரேகன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரசியல் கைதிகள் விவகாரம்; நல்லதொரு தீர்வு கிடைக்கும்

(கொழும்பு)

**தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையை பொறுத்த வரை நல்லதொரு தீர்வு நிச்சயம் எட்டப்படுமென நம்புவதாக வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.**

ஊடகமொன்றிற்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சுரேன் ராகவன் மேலும் கூறியுள்ளதாவது,

"தமிழ் அரசியல் கைதிகள் விடயம் பற்றி நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னரும் கதைத்திருக்கின்றேன்.

வடக்கு மாகாண ஆளுநர் என்ற ரீதியில் அப்போது இருந்த அதிகாரிகளிடம் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக கலந்துரையாடி இருக்கின்றேன்.

மேலும், இந்த விடயத்தை முக்கியமானதாகக் கருதுமாறும் அது நல்லிணக்க நடைமுறையை பலப்படுத்தும் என்றும் தெளிவுபடுத்தி இருந்தேன்.

இது தொடர்பாக நாம் ஒரு நல்ல முடிவை எட்டவிருந்த நேரத்தில்தான் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்தது. அதன் பின் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக மீண்டும் பழைய நிலைக்கே திரும்ப வேண்டியதாயிற்று.



எனினும், ஏதாவதொரு வகையில் தீர்வு விரைவில் வரும் என்று நம்புகின்றேன்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## சோளத் தோட்டங்களில் படைப் புழுத்தாக்கம் கட்டுப்படுத்த ருவாண்டா சிறப்புக்குழு

(கொழும்பு)

வடமத்திய மாகாணம் மற்றும் ஏனைய இடங்களில்பயிரிட்ட சோளத் தோட்டங்களில் படைப் புழுக்களின் (சேனா அந்துப்பூச்சி கம்பளிப்பூச்சி) வேகமான தாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கான விஞ்ஞான நிபுணத்துவத்தை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் நோக்கில், ஜனாதிபதியின் முயற்சியில் ருவாண்டாவிலிருந்து இலங்கைக்கு வந்த சிறப்பு தூதுக் குழுவினர் இராணுவத்தின் ஒருங்கிணைப்புடன் அவர்களின் இரண்டு நாள் சாத்தியக்கூறுகளை ஆராயும் பணியின் முடிவில் பாதுகாப்பு தலைமை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவை இராணுவத் தலைமையகத்தில் வைத்து சந்தித்தனர்.

ஜனாதிபதி ருவாண்டாவின் ஆலோசனையைத் தேடி அவர்களிடம் வேண்டுகோள் விடுத்து 72 மணி நேரத்திற்குள் ருவாண்டாவிலிருந்து விஞ்ஞானிகள், விவசாய வல்லுநர்கள் மற்றும் பூச்சி கட்டுப்பாடு வல்லுநர்கள் அடங்கிய தூதுக் குழு, நல்லெண்ணம் மற்றும் நடைமுறையில்உள்ள இருதரப்பு உறவுகளின் அடையாளமாக, சிறப்பு விமானம் மூலம் கடந்த வியாழக்கிழமை கொழும்பை வந்தடைந்தனர்.

ருவாண்டன் வல்லுநர்கள் சோளத் தோட்டங்கள் பெருமளவில் செய்யப்படுகின்ற தங்கள் நாட்டில் பூச்சியைக் கட்டுப்படுத்துவதில் தங்கள் அனுபவங்களை முன்வைத்தனர்.

படைப் புழுக்கள் அநுராதபுர பகுதியில் மக்காச்சோளத் தோட்டங்களை எவ்வாறு தாக்கியுள்ளன என்பதை அவதானித்தனர்.

ருவாண்டாவுக்கு திரும்பியதும் அவர்களால் விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னர் அந்த பூச்சிகளின் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவர் என்பதை உறுதிப்படுத்தினர். (நி-4)

## மட்டக்களப்பில் கனமழை பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின



(கல்முனை)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாக பெய்து வரும் இடியுடன் கூடிய கடும்மழை காரணமாக தாழ் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட நொச்சிமுனை,நாவற்குடா,வேலூர், கூழாவடி, மாமாங்கம், குமாரபுரம், புன்னைச்சோலை, இரு தயபுரம், கறுவப்பங்கேணி, பாரதி வீதி, எல்லை வீதி உட்பட பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் பலர், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளதை காணமுடிகின்றது. இதே நேரம் படுவான்கரையின் பல பகுதிகளில் வெள்ள அபாயம் காணப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போரதீவுப்பற்று, பட்டிப்பளை, வவுணதீவு, ஏறாவூர்ப்பற்று, கிரான் பிரதேச செயலகப்பரிவுகளிலும் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலையேற்பட்டுள்ளது.(நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## காலம் போற்றும் கதிர்கள்

ஒரு சோதனைச் சாலைக்குள்ளே ஒருத்தர் உட்கார்ந்திருந்தார். ஒரு நாளிலே 20 மணிநேரம் அங்கேயே உட்கார்ந்து ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

மனைவி, அவரிடம் போய் சாப்பிடக் கூப்பிடுகின்றார். அதுகூட அவர் காதிலே விழவில்லை. என்ன ஆகிவிட்டது இவருக்கு? அந்த அம்மாவுக்குக் கவலையாகிப் போய்விட்டது. 1895, நவம்பர் 8 ஆம் திகதி அன்றைக்கும் மாலையில் இருந்து அந்த ஆராய்ச்சி சாலையில் அவர் மட்டும் தான் இருக்கின்றார். உதவியாளர்களெல்லாம் கூட வீட்டுக்குப் போய்விட்டார்கள். ஒரு வெற்றிடக் கண்ணாடிக் குழாயில் மின்சாரத்தைச் செலுத்தி இவர் என்னமோ செய்து கொண்டிருந்தார். அந்தக் கண்ணாடிக் குழாயிலே கறுப்புத் தாளை சுற்றியிருந்தார். வெளிச்சம் வெளியே வராமல் இருக்க அறையில் இருந்த விளக்குகளையும் அணைத்துவிட்டார். இப்பொழுது அந்த வெற்றிடக் குழாய்க்குள்ளே மின்சாரத்தை செலுத்தினார்.

வெளிச்சத் தடுப்புக்காகச் சுற்றியிருந்த கறுப்பு காகிதம் தானாக ஒளிவிட ஆரம்பித்தது.

பேரியம் பிளாட்டினோ சயனேட் என்கின்ற இரசாயனம் தோய்க்கப்பட்ட காகிதம் அது. ஒளிக்கற்றையின் புலனாகாத கதிர்களைக் காட்டக் கூடியது அந்த இரசாயனம். கறுப்புக் காகிதத்தால் மூடப்பட்ட குழாயிலிருந்து புலனாகாத மர்மக் கதிர்கள் வெளியே வருகின்றது புரிந்தது. உலகத்திற்கு ஒரு மகத்தான கண்டுபிடிப்பு கிடைத்தது. அதுதான் எக்ஸ்ரேஅதைக் கண்டு பிடித்த விஞ்ஞானி ராண்ட்ஜன். முழுப் பெயர் வில்ஹெம் கான்ராட் ராண்ட்ஜன். ஜேர்மானிய விஞ்ஞானி. அந்தக் கதிர்களின் தன்மைகளை ஆராய்ச்சி செய்தார். பிளாட்டினம், ஈயம் தவிர ஏனைய எல்லா பொருட்களையும் இந்தக் கதிர் ஊடுருவிச் செல்லக் கூடியது என்பது புரிந்தது.

இந்தக் கதிரை தனது கையிலே ஊடுருவச் செய்து அதை ஒரு போட்டோ தகட்டிலே பதிவு செய்தார். கை எலும்புகள் துல்லியமாக தெரிந்தது. மனைவியின் கைகளை எக்ஸ்ரே கதிர்கள் மூலமாக படம் எடுத்தார். மனைவியின் கை எலும்புகளோடு திருமண மோதிரமும் அதிலே தெரிந்தது.

மருத்துவ உலகிலும் தொழில் துறையிலும் இந்தக் கண்டுபிடிப்பு ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. ஆரம்பத்திலே அவரை எல்லோரும் கொஞ்சம் அலட்சியமாகத்தான் பார்த்தார்கள். எக்ஸ்ரே கண்டு பிடிப்பிற்குப் பிறகு தான் அவர் எப்படிப்பட்டவர் என்பதை எல்லோரும் புரிந்து கொண்டார்கள்.

ஜேர்மனியின் பேரரசர் கெய்சர். அவர் முன்னிலையில் ராண்ட்ஜன் எக்ஸ்ரேயை இயக்கிக் காட்டினார். அந்த மன்னருக்கு இடது தோளிலே ஒரு கோளாறு. அதைப் படம் எடுத்துக் காட்டினார். கோளாறு என்பது புரிந்தது. சிகிச்சை சுலபமாகியது.

எக்ஸ்ரே கண்டுபிடித்த பொழுது மக்களுக்கு ஒரு பக்கம் வியப்பு... இன்னொரு பக்கம் பயம்... ஆடைகளை ஊடுருவிப் பார்க்கக் கூடிய கண்டு பிடிப்பு இது என்று செய்திகள் பரவ ஆரம்பித்தன. அதனால் எல்லோரும் வெளியிலே நடமாடவே பயந்தார்கள்.

அது எந்த அளவுக்கு ஆகிவிட்டது தெரியுமா? சில துணி வியாபாரக் கம்பனிகள் விளம்பரம் கொடுத்தார்களாம். எங்கள் கம்பனி உள்ளாடைகள் பாதுகாப்பானவை. எக்ஸ்ரே கதிர்களால் துளைக்க முடியாதபடி இவை உருவாக்கப்பட்டுள்ளன என்ற வதந்திகள் மக்களை மிகவும் குழப்பி விட்டன. அந்தக் காலத்திலேயெல்லாம் இசை நாட்டிய நிகழ்ச்சிகள் அதிகம். இன்றைக்கு சினிமா மாதிரி. இந்த ஆபரா நிகழ்ச்சிகளுக்காக பெரிய அரங்குகளெல்லாம் உண்டு. கடைசி வரிசையில் இருக்கின்றவர்கள் தொலைநோக்கிக் கண்ணாடி வைத்துக் கொண்டு பார்ப்பார்களாம். ஆபரா கிளாஸ் என்றே அதற்குப் பெயர்.

எக்ஸ்ரே ஏற்படுத்தின வதந்தியாலே நிகழ்ச்சி நடத்துகின்ற கலைஞர்கள் கலவரப்பட்டுப் போய்விட்டார்களாம். அமெரிக்காவிலே ஒரு மாகாணத்திலே விசித்திரமாக ஒரு சட்டம் போட்டார்களாம். இனி ஆபரா அரங்குகளில் எக்ஸ்ரே கதிர் உள்ள தொலைநோக்குக் கண்ணாடிகளைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்படுகின்றது. இது தான் சட்டம்.

இப்படிப்பட்ட கண்ணாடி செய்ய சாத்தியமா என்பது தெரியாமல் சட்டம் இயற்றினார்கள் என்றால் அது மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது.

அது இருக்கட்டும் இப்பொழுது எக்ஸ்ரே எதுக்கெல்லாம் உபயோகப்படுகின்றது தெரியுமா?

ஒரு இளைஞன் டாக்டரிடம் போனான். டாக்டர் நான் உங்களுடன் படித்த வெங்கட் ராமனுடைய மகன். எங்கள் அப்பா தான் உங்களிடம் அனுப்பினார்.. எனக்கு நெஞ்சு வலி என்றார். மிகவும் சந்தோசம். உங்கள் அப்பா எனக்கு பால்ய சிநேகிதம்...எப்படியிருக்கின்றான். சரி.. நீ போய் ஒரு எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு நாளைக்கு வா என்றுவிட்டார். இவன் போனான். எக்ஸ்ரே எடுத்துக் கொண்டான். மறுநாள் போனான். டாக்டர் பார்த்தார். அவருக்கு ஞாபகம் வரவில்லை. பேசாமல் இருந்தார்.

டாக்டர் நான் நேற்றைக்கு வந்தேன். நீங்கள் தானே எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு வரச் சொன்னீர்கள் என்றான்.

அப்படியா சொன்னேன்.. சரி படத்தைக்கொடு பார்க்கலாம் என்று வாங்கினார். எக்ஸ்ரே படத்தை வாங்கி வெளிச்சத்திற்கு முன்னாடி வைத்து உற்றுப் பார்த்தார். எலும்புக் கூடு தெளிவாகத் தெரிந்தது. அதற்குப் பின்பு தான் அவருக்கு ஞாபகம் வந்தது அடடே நீ வெங்கட்ராமன் பிள்ளையாடா..வா..வா.. வந்து உட்காரு என்றார்.

# நாடுகளின் ஆட்புல எல்லைகளும் இலங்கையின் எல்லையோரக் கடல்எல்லை நிர்ணயமும்

03

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



ஆனால் இந்நடமாட்டத்திற்கு கட்டுப்பாடுகள் மற்றும் சில நேரங்களில் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகள் இருக்கும். இந்த வகை எல்லைக்கு எல்லையை கடக்கும் ஒரு நபருக்கு விசா தேவைப்படும். அல்லது சில சந்தர்ப்பங்களில் புதிய குறுகிய கால விசா தேவைப்படும். விசா நடைமுறை குறிப்பிட்ட நிபந்தனைகளுடனும் இணங்குவதை சரிபார்க்கவும் எல்லையைக் கடக்கும் நபர்களின் நகர்வுகளை ஆவணப்படுத்தவும் பதிவுசெய்யவும் உதவும்.

**இரு நாடுகளுக்கு இடையேயான கட்டுப்படுத்தப்பட்ட எல்லை என்பது எல்லைகளுக்கு இடையில் மக்களை நடமாட்டத்தை அனுமதிக்கும் ஒரு எல்லையாகும். ஆனால் இந் நடமாட்டத்திற்கு கட்டுப்பாடுகள் மற்றும் சில நேரங்களில் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடுகள் இருக்கும்**

### ஒரு மூடிய எல்லை (A closed border)

ஒரு மூடிய எல்லை என்பது வரையறுக்கப்பட்ட அல்லது விதிவிலக்குகளுடன் வெவ்வேறு சட்ட அதிகார வரம்புகளுக்கு இடையில் மக்கள் நடமாட்டத்தைத் தடுக்கும் ஒரு எல்லையாகும். இந்த எல்லைகள் பொதுவாக வேலிகள் அல்லது சுவர்களைக் கொண்டுள்ளன. அதில் நுழைவாயில்கள் அல்லது எல்லைக் கடப்புகள் மூடப்பட்டிருக்கும். இந்த எல்லை நுழைவாயில்கள் திறக்கப்பட்டால் அவை பொதுவாக விதிவிலக்கான சூழ்நிலைகளில் மக்கள் அவ் எல்லையைக் கடப்பதற்கு அனுமதிக்கின்றன. தற்போதுள்ள மூடிய எல்லைக்கு மிகவும் பிரபலமான எடுத்துக்காட்டு வட கொரியாவிற்கும் தென் கொரியாவிற்கும் இடையிலான இராணுவமயமாக்கப்பட்ட வலயமாகும். முன்னர் பேர்லின் சுவர் ஒரு மூடிய எல்லை என்றும் அழைக்கப்பட்டது.

### பூட்டான் - இந்தியா நட்புறவு ஒப்பந்தம் -1949

இந்தியாவும் பூட்டானும் திறந்த எல்லைகளை பகிர்ந்து கொள்கின்றன, இதனால் இரு நாடுகளிலும் தங்கள் குடிமக்களுக்கு கட்டுப்பாடற்ற போக்குவரத்து சுதந்திரத்தை அனுமதிக்கிறது.

### இந்தியா-நேபாள அமைதி மற்றும் நட்புறவு ஒப்பந்தம்- 1950

இந்தியாவும் நேபாளமும் திறந்த எல்லைகளை பகிர்ந்து கொள்கின்றன, இதனால் இரு நாடுகளிலும் தங்கள் குடிமக்களுக்கு கட்டுப்பாடற்ற போக்குவரத்து சுதந்திரத்தை அனுமதிக்கிறது.

### ஆண்டியன் சமூகம் (The Andean Community) -2007

பொலிவியா, கொலம்பியா, ஈக்வடோர் மற்றும் பெரு ஆகிய நாடுகள் இந்த ஏற்பாட்டின் கீழ் திறந்த எல்லைகளைப் பகிர்ந்து கொள்கின்றன, அடையாள ஆவணங்கள் இல்லாமல் (விமானப் பயணத்தை தவிர) இந் நாடுகளில் தங்கள் குடிமக்களுக்கு கட்டுப்பாடற்ற போக்குவரத்து சுதந்திரத்தை அனுமதிக்கின்றன. முழு ஆண்டியன் சமூகத்திற்கும் நுழைவதற்கான கட்டுப்பாடுகள் ஒருவர் நுழையும் முதல் நாட்டில் மேற்கொள்ளப்படுகின்றன.

### கிழக்கு ஆபிரிக்க சமூகம் (EAC)-2000

கென்யா, தான்சானியா, உகண்டா, தென்சூடான், ருவாண்டா மற்றும் புருண்டி ஆகிய கிழக்கு ஆபிரிக்க நாடுகள் சமூக ஏற்பாட்டின் கீழ் திறந்த எல்லைகளைப் பகிர்ந்து கொள்கின்றன, இதனால் இவ் உறுப்பு நாடுகளில் தங்கள் குடிமக்களுக்கு கட்டுப்பாடற்ற போக்குவரத்து சுதந்திரத்தை அனுமதிக்கின்றன. ஆனால் நாடுகளுக்கு இடையுள்ள எல்லைப்பிரச்சினை இதை நடைமுறைப்படுத்துவதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளன.

### வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (Gulf Cooperation Council) 1981

பஹ்ரைன், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத் மற்றும் ஓமான் ஆகியவை வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் ஏற்பாட்டின் கீழ் திறந்த எல்லைகளை பகிர்ந்து கொள்கின்றன. இதனால் அவர்களின் குடிமக்கள் அடையாள ஆவணங்கள் தேவையில்லாமல் நாடுகளுக்குள் கட்டுப்பாடற்ற முறையில் சுதந்திரமாக போக்குவரத்து செய்ய அனுமதிக்கின்றனர். முழு வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் நாடுகளுக்குள் நுழைவதற்கான கட்டுப்பாடுகள் நுழையும் முதல் நாட்டிற்குள் மேற்கொள்ளப்படுகின்றன.

### கரீபியன் ஒற்றை சந்தை மற்றும் பொருளாதாரம் (Caribbean Single Market and Economy) -2009

கரிகொம் (CARICOM) ஒற்றை சந்தை மற்றும் பொருளாதார நாடுகளான ஆன்டிகுவா மற்றும் பார்புடா, (Antigua and Barbuda), பஹாமாஸ் (Bahamas), பார்படாஸ் (Barbados), பெலிஸ் (Belize), டொமினிகா (Dominica), கிரெனடா (Grenada), கயானா (Guyana), மொன்செராட் (Montserrat), ஹைட்டி (Haiti), ஜமைக்கா (Jamaica), மொன்செராட் (Montserrat), செயின்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் (St Kitts and Nevis), செயிண்ட் லூசியா (Saint Lucia), செயின்ட் வின்சென்ட் மற்றும் கிரெனடைன்ஸ் (St Vincent and Grenadines), சுரினேம்(Suriname), மற்றும் டிரினிடாட் மற்றும் டொபாகோ (Trinidad and Tobago) ஆகியவை திறந்த எல்லைகளை பகிர்ந்து கொள்கின்றன, அடையாள ஆவணங்கள் தேவையில்லாமல் (விமானப் பயணத்திற்கு வழக்கமாகத் தவிர) எல்லா நாடுகளிலும் தங்கள் குடிமக்களுக்கு கட்டுப்பாடற்ற போக்குவரத்து சுதந்திரத்தை அனுமதிக்கிறது. முழு CARICOM இல் நுழைவதற்கான கட்டுப்பாடுகள் நுழைந்த முதல் நாட்டில் மேற்கொள்ளப்படுகின்றன.

### மத்திய அமெரிக்கா -4 எல்லை கட்டுப்பாட்டு ஒப்பந்தம் (CA-4 Border Control Agreement)- 2006

CA4 எல்லைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம், ஷெங்கன் ஒப்பந்தத்தைப் போலவே செயற்படுகிறது. நாடுகளின் குடிமக்கள் மற்றும் வெளிநாட்டினருக்கான முழு சுதந்திர போக்குவரத்து இருப்பினும், விமானத்தில் பயணிக்கும் வெளிநாட்டினர் தேவையான அனுமதிகளைப் பெற்று எல்லை சோதனைச் சாவடிகளில் சோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

### ரஷ்யா மற்றும் பெலாரஸ் ஒன்றிய நாடுகள் -1996

ரஷ்யாவும் பெலாரஸும் திறந்த எல்லைகளைப் பகிர்ந்து கொள்கின்றன, எந்தவொரு குடிமகனும் எந்தவொரு எல்லை சோதனையும் இல்லாமல் இரு நாடுகளிலும் கட்டுப்பாடற்ற முறையில் நடமாட சுதந்திரத்தை அனுமதிக்கின்றன. இருப்பினும் இந்த எல்லை வெளிநாட்டினருக்கு முற்றிலும் மூடப்பட்டுள்ளது.

### பொதுவான பயண பகுதி (Common Travel Area) -1923

அயர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம் பொதுவான பயண பகுதி ஏற்பாட்டின் கீழ் திறந்த எல்லைகளை பகிர்ந்து கொள்கின்றன. இதனால் அவர்களின் குடிமக்கள் கட்டுப்பாடற்ற நடமாட சுதந்திரத்தை அனுமதிக்கின்றனர் அடையாள ஆவணங்கள் தேவையில்லாமல் இரு நாடுகளும் (விமானப் பயணத்திற்கு தவிர). முழு பொதுப்பயண பகுதிக்கும் நுழைவதற்கான கட்டுப்பாடுகள் நுழைந்த முதல் நாட்டில் மேற்கொள்ளப்படுகின்றன.

### நோர்டிக் பாஸ்போர்ட் யூனியன் (Nordic Passport Union)- 1952

நோர்டிக் பாஸ்போர்ட் யூனியன் ஆரம்பகால திறந்த எல்லை ஒப்பந் தங்களில் ஒன்றாகும். டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே மற்றும் சுவீடன் ஆகியவை நோர்டிக் நாடுகளின் குடிமக்கள் எந்தவொரு பயண ஆவணங்களும் அல்லது குடியிருப்பு அனுமதி இல்லாமல் மற்றொரு நோர்டிக் நாட்டில் பயணம் செய்ய வசிக்க அனுமதிக்கின்றன. இந்த ஐந்து நாடுகளும் ஷெங்கன் பகுதியின் ஒரு பகுதியாக உள்ளன் இருப்பினும், நோர்டிக் பாஸ்போர்ட் யூனியன் நாடுகளின் குடி மக்கள் நோர்டிக் பகுதிக்குள் கூடுதல் உரிமைகளை அனுபவிக்கிறார்கள்,.

பரோயே தீவுகள் நோர்டிக் பாஸ்போர்ட் யூனியனின் ஒரு பகுதியாகும், ஆனால் ஷெங்கன் பகுதி அல்ல, கிரீன்லாந்து மற்றும் ஸ்வால்பார்ட் இரண்டும் நோர்டிக் பாஸ்போர்ட் யூனியனுக்கு வெளியே உள்ளன. இருப்பினும், கிரீன்லாந்து அனைத்து நோர்டிக் நாடுகளுடனும் ஒரு திறந்த .எல்லையைக் கொண்டுள்ளது, மேலும் நோர்டிக் குடிமக்களுக்கு பாஸ்போர்ட் அல்லது அனுமதி தேவையில்லாமல் நுழையவும், குடியேறவும், வேலை செய்யவும் அனுமதிக்கிறது

**தனித்துவமாக, ஸ்வால்பார்ட்டின் (Svalbard) நோர்வே சிறப்பு பிரதேசம் முற்றிலும் விசா இல்லாத மண்டலம். எந்தவொரு நபருக்கும் விசா அல்லது குடியிருப்பு அனுமதி தேவையில்லை,** குடியுரிமையைப் பொருட்படுத்தாமல் எவரும் ஸ்வால்பார்ட்டில் காலவரையின்றி வாழ்ந்து வேலை செய்யலாம். ஸ்வால்பார்ட் நாட்டினருக்கு நோர்வே நாட்டினராக இருப்பதற்கு சமமான உரிமையை வழங்குகிறது.

### ஷெங்கன் நாடுகள்

ஐரோப்பாவில் 26 நாடுகளைக் கொண்ட மிகப்பெரிய பகுதி இது. அவர்கள் அனைவரும் ஷெங்கன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளால் ஒன்று பட்டுள்ளனர். அவர்களைப் பொறுத்தவரை, ஐரோப்பிய குடிமக்கள் நாடுகளின் எல்லைகளில் பாஸ்போர்ட் கட்டுப்பாட்டுக்கு உட்படாமல் ஷெங்கன் நாடுகள் முழுவதும் பயணிக்க முடியும்.

### ஒரு நாட்டின் எல்லைக்குள் மற்றைய நாட்டின் பிரதேசமிருத்தல் (exclaves & enclaves)

ஒரு உறைவிடம் (Enclave) என்பது ஒரு நாட்டின் ஒரு பகுதி (அல்லது ஒன்றின் ஒரு பகுதி) முற்றிலும் வேறு நாட்டின் பிரதேசத்தால் சூழப்பட்டிருத்தல். பிராந்திய நீர்நிலைகளுக்குள்ளும் enclaves இருக்கலாம். சில நேரங்களில் வேறொரு நாட்டினால் மட்டுமே சூழப்பட்ட ஒரு பிரதேசத்தைக் குறிக்கும்.

வத்திக்கான் மற்றும் சான் மரினோ ஆகிய இரண்டும் இத்தா லியால் சூழப்பட்ட இறையாண்மை கொண்ட நாடுகளாகும். இதேபோல் தென்னாபிரிக்காவால் சூழப்பட்ட லெசோதோ இறையாண்மை கொண்ட நாடாகும். Exclave என்பது இதன் மறுதலையாகும்.

இந்தியா மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்கிடையே எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட போதும் இந்தியாவின் சில பகுதிகள் பங்களாதேஷுக்குள்ளும் (படம்-2/A) பங்களாதேஷின் சில பகுதிகள் இந்தியாவிற்குள்ளும் (படம்-2/ B) காணப்பட்டன.


இதில் மேலும் விசித்திரம் என்னவென்றால் பங்களாதேஷ் நாட்டை எடுப்போமானால் பங்களாதேஷின் பிரதேசத்துக்குள் இந்தியாவின் பிரதேசம் உள்ளது. அந்த இந்தியாவின் பிரதேசத்துக்குள் பங்களாதேஷின் பிரதேசம் உள்ளது.

அதற்குள் மீண்டும் இந்தியாவின் பிரதேசம் உள்ளது. படம்-3அ வில் காட்டியதுபோல். இதே போல் இந்தியா நாட்டை எடுப்போமானால் இந்தியாவின் பிரதேசத்துக்குள் பங்களாதேஷின் பிரதேசம் உள்ளது. அதற்குள் மீண்டும் இந்தியாவின் பிரதேசம் உள்ளது. படம்-3ஆ வில் காட்டியது போல்.

**இப் பிரச்சினையினை தீர்த்து எல்லையை எளிதாக்குவதற்கான நில எல்லை ஒப்பந்தம் 2015, மே மாதம் 7 ஆம் திகதி அன்று இந்தியா மற்றும் வங்காளதேசத்தால் அங்கீகரிக்கப் பட்டது.**

(தொடரும்...)

# சூரியசக்தி மூலம் மின்சாரம் பெறுவதில் அரசு அவதானம்



(கொழும்பு)
நாட்டில் சூரிய சக்தி மூலம் பெறப்படும் மின்சாரத்தைக் கொண்டு அதிகளவில் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பில் அரசாங்கத்தினால் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.


எதிர்வரும் 2030 ஆம் ஆண்டளவில் 70 சதவீதம் சூரியசக்தி பெற்றுக்கொள்வதற்கான இலக்கினை நிர்ணயித்து வர்த்தமானி வெளியிடுமாறு சூரிய சக்தி தொழிற்துறையினர் கோரியுள்ளனர்.

தற்போது அது 50 சதவீதமாகவே காணப்படுவதாகவும் அண்மையில் தெரிவித்தனர்.

இந்த யோசனை தொடர்பில் அவதானம் செலுத்தி வருவதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (நி-4)

# ஆலய வழிபாடு

## ஏன் – எதற்கு – எப்படி



## சங்கடம் தீர்க்கும் சந்நதிகள்

(தொடர்ச்சி)
முதலில் அங்கு விநாயகர் இருப்பார். அவரை வணங்கி தோத்திரம் சொல்ல வேண்டும். நெற்றியில் குட்டிக்கொண்டு மூன்று முறைத் தோப்புக்கரணம் போட வேண்டும்.

அடுத்து தென் திசைக் கடவுளான தெட்சிணாமூர்த்தியைப் பார்க்க வேண்டும். அவரை மனம் உருக வழிபட்டால் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நீங்கும். இதன்மூலம் ஜீவன், சிவத்தை அடையும் விதத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதையடுத்து கருவறை பின்பகுதியில் ஒன்று விஷ்ணு இருப்பார். இல்லையெனில் லிங்கோற்பவர் இருப்பார். ஜோதி வடிவமாக உள்ள இறைவன் ஆலயத்தில் லிங்கோற்பவர் வடிவத்தில் இருப்பதாகச் சொல்வார்கள்.

லிங்கோற்பவரை வழிபட்டால் இயற்கைக்கு மாறாகப் போனால் இறைவனைக் காண முடியாது என்ற தத்துவத்தை உணர முடியும்.

அருகில் முருகப்பெருமான் சந்நதி இருக்கும். தெய்வத்தன்மை, இனிமை, இளமை, மணம், மகிழ்ச்சி, அழகு என்ற 6 தன்மைகளை உடைய ஆறுமுகனைக் கண்குளிர கண்டு ஆனந்தமாக வழிபட வேண்டும்.

முருகன் சந்நதியைத் தொடர்ந்து பிரம்மா, சண்டிகேசுவரர், துர்க்கை. ஆகியோரையும் கோஷ்டத்தில் காணலாம். இவர்களையும் முறைப்படி வணங்க வேண்டும்.

சண்டேஸ்வரர் சந்நதியில் "பெருமானே, ஈசனை வழிபட்டேன். அந்தப் பலனை எனக்குத் தாருங்கள்" என்று பவ்வியமாக மூன்று தடவை மெல்லக் கை தட்டிச் சொல்ல வேண்டும். அவர் சந்நதியை முழுமையாகச் சுற்றக் கூடாது. கை தட்டி வணங்கி விட்டு வந்த வழியே திரும்பி வந்து விட வேண்டும்.

சண்டேஸ்வரர் என்பது ஒரு பதவி. கணக்காளர் பதவி மாதிரி என்று வைத்துக் கொள்ளலாம். ஈசனிடம் நாம் வேண்டியவை நிறைவேற இவர்தான் பரிந்துரை செய்ய வேண்டுமாம்.

இவர் ஈசனிடம் நம்மைப் பற்றிப் பரிந்துரை செய்யாவிட்டால் நாம் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டதற்கு ஒரு அர்த்தமே இல்லாமல் போய்விடும்.

இதன்மூலம் சண்டேஸ்வரர் சந்நதி எவ்வளவு மகத்துவம் வாய்ந்தது என்பது உங்களுக்குப் புரிந்து இருக்கும்.

சிலர் இவரை செவிட்டுச்சாமி என்று அறியாமையால் சொல்கிறார்கள். எப்போதும் அவர் சிவயோகத்தில் இருப்பதால் நாம் வந்திருப்பதைக் கைதட்டிச் சொல்கிறோம்.

சிலர் இவர் மீது நூல், துணிகளைப் போடுவது உண்டு. இது மிகவும் பாவம் தரக்கூடியது. அப்படி செய்யக்கூடாது. இதையடுத்து துர்க்கையை உரிய தோத்திரங்கள் சொல்லி வழிபட வேண்டும்.

அதே பிரகாரத்தில் நடராஜர் சந்நதி, பள்ளி அறை இருக்கும். அங்கும் தவறாமல் வழிபட வேண்டும்.

இவற்றைக் கடந்தால் வைரவரைப் பார்க்கலாம். சிவந்த ஜடையுடன், சூலம், கபாலம், உடுக்கை ஏந்தி நிர்வாணமாக நிற்கும் பைரவர் தான் ஆலயத்தைக் காப்பவர்.

அவரை உரிய நாளில் உரிய பூஜைகள் செய்து வழிபட்டால் எவ்வளவு பெரிய கர்ம வினைகள், தோஷங்களும் சிட்டாகப் பறந்து ஓடி விடும்.

இதையடுத்து பிரகாரங்களில் நால்வர், அறுபத்து மூவர், நாக தேவதைகள், கன்னி மூல கணபதி மற்றும் பல வகை மூர்த்தங்கள் இருக்கும்.

இந்தச் சந்நிதிகளில் எல்லாம் பொறுமையுடன் வழிபாடு செய்ய வேண்டும். சிவனடியார்களான அறுபத்து மூவரை நாம் செய்யும் வழிபாடானது ஈசனுக்கே செய்ததற்குச் சமமாகும். அவர்கள் செய்த சிவத்தொண்டுகளை மனதில் கொண்டு வந்து நினைத்து வழிபடுவது சிறப்பானது. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## மேலும் 594 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)
கொவிட்-19 பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 594 இலங்கையர்கள் நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதிக்குள் நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி இவர்கள் இலங்கை அரசாங்கத்தின் சிறப்பு அனுமதியுடன் ஒன்பது விமானங்களின் மூலமாக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்ததும் விமான நிலையத்தில் அமைந்துள்ள மருத்துவ ஆய்வகத்திலிருந்து இவர்கள் இலவச பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அதன் பின்னர் அரசாங்கத்தின் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். (நி-4)

## வணிக விமானங்களுக்காக திறக்கப்படும் விமான நிலையங்கள்

(கொழும்பு)
வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் உள்ளிட்ட அனைத்து வணிக விமானங்களுக்காக ஜனவரி 22 ஆம் திகதி தொடக்கம் விமான நிலையங்களை திறக்க நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் அவதானம் செலுத்தி சுகாதார பிரிவுகளின் விசேட கண்காணிப்பின் கீழ் விமான நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார்.


மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "ஜனவரி 22 ஆம் திகதியின் பின்னர் நாட்டிற்கு வருவதற்கு அனைத்து வர்த்தக விமானங்களுக்கும் சந்தர்ப்பம் வழங்க நாம் எதிர்பார்த்துள்ளோம். பாதுகாப்பு முறைமைகளை கடைப்பிடித்து நாட்டைத் திறக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## 24 மணி நேரத்தில் 23 பேர் கைது

(கொழும்பு)
முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் கொவிட்-19 சுகாதார ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 23 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரை 2,098 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-4)

## கிழக்கில் திரட்டப்படும் பாதிப்புகள் பற்றிய விபரம்




(திருமலை)
கிழக்கு மாகாணத்தில் கடந்த 40 வருட காலத்தில் சமூகங்கள் எதிர்கொண்ட பாதிப்புக்களைப் பற்றிய விபரம் திரட்டப்படுவதாக அம்மாகாண சமூக அநீதிகளை ஆராய்வதற்காக நியமிக்கபபட்ட நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பிரிவினைவாத நடவடிக்கை அல்லது முறையற்ற செயற்பாடுகள் அல்லது சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளால் பாதிப்பிற்குள்ளான தனிநபர்கள் அல்லது குழுக்களின் கவனத்தை ஈர்க்கும் பொது அறிவித்தலாக இது விடுக்கப்பட்டுள்ளது. (நி-4)



# சிறுவர் அரங்கம்

## செயற்கரிய சாதனை



ஒருநாள் மன்னர் முல்லாவை கௌரவிக்கும் விதத்தில் அவருக்கு விருது ஒன்று அளிக்க எண்ணி, அதைப் பற்றி சபையினரின் கருத்துக்களைக் கேட்டார். முல்லாவை பிடிக்காதவர்கள் எழுந்து நின்று, சாமானிய மனிதர்களின் இயல்புக்கு மீறிய அற்புதம் எதையும் அவர் நிகழ்த்தியது இல்லை. அதனால் அவர் எந்த வகையிலும் சிறப்பு செய்வதற்கு தகுதியானவர் இல்லை என்று தங்களின் அதிருப்தியை தெரிவித்தனர்.

அந்த சமயம் முல்லா சபையில் இல்லை. சபையை நோக்கி வந்து கொண்டிருந்த முல்லாவிற்கு அவருடைய எதிரிகளின் பேச்சு காதில் விழுந்தது. உடனே அவர் கீழே குனிந்து கைகளைத் தரையில் ஊன்றி கால்களாலும் கைகளாலும் ஒரு விலங்கு நடப்பது போல நடந்து சபைக்குள் பிரவேசித்தார். அதைக் கண்டு சபையில் இருந்தவர்கள் வியப்பும் திகைப்பும் அடைந்தனர்.

மன்னரோ! முல்லாவை பார்த்து சிரித்தவாரே, ஏன் முல்லா ஒரு விலங்கு போல நான்கு கால்களில் நடந்து வருகிறீர், உமக்கு என்ன பைத்தியமா? என்று கேட்டார்.

முல்லா எழுந்து மன்னரை வணங்கி மன்னர் பெருமானே, நான் மனித இயல்புக்கு மீறிய அசாதாரண செயல் எதையும் செய்யவில்லை. அதனால் தான் மனித இயல்புக்கு மாறுபட்டு ஒரு மிருகம்போல நடந்து புரட்சிகரமான சாதனை ஒன்று செய்தேன் என்றார். இனி என் அறிவாற்றலை பற்றி யாரும் சந்தேகப்பட மாட்டார்கள் என்றார்.

முல்லாவின் எதிரிகளான பொறாமைக்காரர்கள் வெட்கித் தலைகுனிந்தார்கள்.

மன்னர் முல்லாவின் அறிவுச் சாதுரியத்தைக் கண்டு மகிழ்ந்து பரிசுகள் அளித்தார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கலங்க வைத்த கிரானிகஸ் யுத்தம்

76



பாரசீக மன்னன் மூன்றாம் டேரியஸ்

அலெக்சாண்டர் வெறும் உத்தரவுகளை மட்டும் பிறப்பித்துவிட்டு ஓரமாக நின்று வேடிக்கை பார்க்கும் தலைவர் அல்ல. களத்தில் குதித்து உழைப்பைச் செலுத்தக்கூடியவர். வீரத்தை வெளிப்படுத்தக்கூடியவர்.

ஊக்கத்துடன் வாளைச் சுழற்றிக்கொண்டிருந்தார் அலெக்சாண்டர். வீச்சில் சிக்கும் அத்தனை தலைகளும் அடுத்த நொடி மண்ணை அப்பிக் கொண்டன. மண் செம்மண்ணாக மாறிக்கொண்டிருந்தது.

அலெக்சாண்டர் களத்தில் இறங்கிப் போராடக்கூடியவன் என்பது பாரசீகப் படைகளுக்கு நன்றாகத் தெரியும். மும்முரமாகப் போரிட்டுக் கொண்டிருந்த சமயத்தில் ஸ்பித்ரிடேட்ஸ் (Spithridates) என்கிற பாரசீக வீரன் அலெக்சாண்டரை அடையாளம் கண்டு கொண்டான்.

அலெக்சாண்டர் அவனைக் கவனிக்கவில்லை. போர் மும்முரம். உள்ளுக்குள் நடுக்கம் ஏற்பட்டாலும் சட்டென்று சுதாரித்துக் கொண்டான் ஸ்பித்ரிடேட்ஸ். பெரிய மீன் மாட்டியிருக்கிறது. அவர் கவனிக்காத பட்சித்தில் அவரைத் தாக்கிக் கொன்றுவிட்டால் மிகப்பெரிய வெற்றி. பாரசீகர்களுக்கு அற்புதமான வெற்றி. எவ்வளவு அற்புதமான வாய்ப்பு. நாம் அதைச் சாதித்துக் கொடுத்தால் எவ்வளவு பெயர். எவ்வளவு புகழ். ஒட்டுமொத்த பாரசீகர்களும் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடுவார்கள்.

வண்ண வண்ணக் கனவுகள் கண்முன் நிழலாடின. தலைக்குப் பின்னால் ஒளிவட்டம் உருவானது போன்ற உணர்வு. வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். கையில் இருந்த கோடரியை எடுத்து அலெக்சாண்டரை நோக்கி வீசினான்.

தலைதுண்டானது. கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து விட்டது இந்தக் காரியம். சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார் அலெக்சாண்டர். அவருக்கு அருகில் நின்றிருந்த வீரன் தரையில் இரத்த வெள்ளத்தில். ஆம், குறி தப்பியிருந்தது. அதனால் அலெக்சாண்டரும் தப்பியிருந்தார். தூரத்தில் நின்று கொண்டிருந்த கிளைட்டஸ் என்கிற மாசிடோனியத் தளபதி நடப்பதைக் கவனித்து நொடி கடப்பதற்குள் வாளை வீசினார். ஸ்பித்ரிடேட்சின் தலை கழுத்தில் இருந்து தரைக்கு இடம் மாறியிருந்தது.

(தொடரும்)

இடுக்கண் வருமின், அஞ்சாமல் வெல்லுவீர்
புறஞ்சொல் நீக்குமின், முன்நின்று கூறுவீர்
அன்புடன் பழகுமின் ஒற்றுமை வளர்ப்பீர்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் தமிழினத்துக்காக ஒன்றுபட்டு செயற்படுங்கள்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் தமிழர் தரப்பால் முன்வைக்க வேண்டிய முன்மொழிவை தயாரிப்பதில் பாராளுமன்ற உறுப்பினர்களான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அடங்கிய குழுவொன்றை நியமிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானம் தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

பொதுவில் தமிழர் தரப்பில் நிலவிவந்த ஒற்றுமையீனம் எங்களின் உரிமைசார் விடயங்களை அடைவதற்கு மிகப்பெரும் தடைக்கல்லாக இருந்தது.

ஆம், ஒருவரை ஒருவர் மாறி மாறிக் குற்றம் சாட்டுவதில் காலம் கடந்து போனது.

தவிர, ஒரு தரப்பால் எடுக்கப்படுகின்ற முடிவுகள் விமர்சனத்துக்கு ஆளாகி இருந்தன.

இந்நிலைமை நம்பிக்கையீனங்களையும் எதிர்ப்புணர்வுகளையும் ஏற்படுத்தின.

உண்மையில் எம் தமிழ் இனத்தின் உரிமையை வென்றெடுப்பதற்கான முயற்சிகள், அதற்கான வேலைத்திட்டங்கள், அது தொடர்பில் ஐ.நாவில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முன்மொழிவுகள், இணங்கப்படக்கூடிய விடயங்கள் என்பன தொடர்பில் தமிழ் அரசியல் தரப்புகளுடன் கலந்தாலோசித்து அனைவரும் இணங்கிக் கொள்ளக்கூடிய தீர்மானங்களை எடுப்பது மிக மிக அவசியமானது.

எனினும் கடந்த காலங்களில் குறித்த தமிழ் அரசியல் தரப்பு தன்னளவில் ஒரு சிலரை வைத்துக் கொண்டு முடிவுகளை எடுத்துக் கொண்டதால் அஃது மிகப்பெரிய விமர்சனங்களை ஏற்படுத்தியதுடன் எடுக்கப்பட்ட முடிவுகள் தமிழ் மக்களை எந்த வகையிலும் ஆற்றுப்படுத்தவோ ஆறுதல்படுத்தவோ இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆக, இப்போதிருக்கின்ற தமிழர்களின் அரசியல் நிலைமை ஏதோவொரு வகையில் துறைசார் வல்லமை உடையவர்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த நிலைமையானது; சட்ட நிபுணத்துவம் உடையவர்களை ஒன்றுபடுத்தி அனைவரது கருத்துக்களையும் உள்ளடக்கி தமிழர் தரப்பால் முன்வைக்க வேண்டிய முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கும் அதனை சர்வதேச ரீதியில் ஏற்புடையதாக ஆக்குவதற்குமான நல்லதொரு சந்தர்ப்பமாகும்.

ஆம், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் ஒன்றிணைந்து முன்மொழிவைத் தயாரிப்பது தமிழ் இனத்தின் உரிமைக்கான வலிமைமிக்க குரலாக அமையும் என்பது சர்வ நிச்சயம்.

ஆகவே தமிழ் மக்களுக்காக மனந்திறந்து பேசுங்கள். கதையுங்கள். இறைவன் நமக்குப் பக்கபலமாக இருப்பான்.

# வளமான எதிர்காலத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம்

## அழைப்பு விடுக்கிறார் சஜித்

(கொழும்பு)

வளமான எதிர்காலத்தை உருவாக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் புத்தாண்டில் தமது கடமைகளைத் தொடங்கியுள்ளது.

கட்சியின் பொதுப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர், அனைத்து இன, மதங்களையும் பாதுகாக்கும் அதேவேளை அனைவரும் நாட்டை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டும் எனக் கூறினார்.

மேலும் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றும் மக்களுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்க ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்

அத்தோடு தற்போது பொது மக்கள் கடும் சுமையைக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ள பெண்கள்

## அரசை சாடிய அத்துகோரள

(கொழும்பு)

கொவிட் தொற்றின் இரண்டாம் அலையில் ஆடை தொழிற்சாலையில் பணி புரியும் பெண்களும், நாட்டுக்கு பாரியளவில் அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள பணிப் பெண்களும் தற்போது பாரிய நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

இவர்கள் தொடர்பில் அரசாங்கம் முழுமையான கவனம் செலுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாம் மகளிர் தொடர்பானயோசனைகளை முன்வைத்த போது அதற்கு எதிராக கூச்சலிடப்பட்டது.

ஆனால் இன்று பெண்களின் பிரச்சினை தொடர்பில் அமைச்சரவையில் பேசுவதற்குக் கூட ஒரு அமைச்சர் நியமிக்கப்படவில்லை. ஆடைத் தொழிற்சாலை மூலம் நாட்டுக்கு கூடுதல் வருமானத்தை பெற்றுக் கொடுப்பது பெண்களாவர்.

கொவிட் தொற்று பல வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஏற்படுத்திக் கொடுக்கும் பெண்களை அழைத்து வருவதற்கு கூட அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

ஆடை தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் இரண்டாம் அலையின் பின்னர் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

பெருந்தோட்டப் பகுதிகளிலும் இந்த பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஆனால் அவை வெளிப்படுத்தப்படவில்லை.

பெண்களுக்கான அமைச்சு ஒன்றைக்கூட வழங்க முடியாத அரசாங்கத்தின் ஆட்சியில் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்தும் குரல் கொடுக்கும் என்றார். (நி-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 06ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**வவுனியா பிரதேச**த்தில் கூடுவெந்த புலவு கிராமம், புதிய சின்னக்குளம் கிராமம், தாண்டிக்குளம் கிராமம், குடாகச்சக்கொடிய கிராமம், மடுக்கந்தையிலிருந்து துட்டுவாகை வரை, குடாகச்சக்கொடிய கல் உடைக்கும் ஆலை, கோவில்குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை, அரசடிக்குளம், ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## இயற்கையுடன் போர் செய்

❖ இடையறாத முயற்சியின் மூலம் நம்மை நாடி வரும் கஷ்டங்களை வெல்ல முடியும்.

❖ நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். உன்னை வலிமை உள்ளவனாக நினைத்தால் வலிமை படைத்தவனாகிறாய்.

❖ வாழ்க்கையில் கீழ்ப்படிவதற்கு கற்றுக்கொள். கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்தடையும்.

❖ அடக்கப்படாத மனம் நம்மைக் கீழ் நோக்கியே இழுத்துச் செல்லும். அடக்கப்பட்ட மனம் நமக்குப் பாதுகாப்பளிப்பதுடன், விடுதலையும் தரும்.

❖ அளவற்ற ஆற்றல், பெரும் ஊக்கம், அளவு கடந்த அஞ்சாமை, அளவில்லாத பொறுமை ஆகியவை நமக்குத் தேவை.

❖ இயற்கையை எதிர்த்துப் போராடி வளர வேண்டும். இயற்கையோடு எப்போதும் போர் செய்வதே மனித முன்னேற்றத்தின் படிக்கற்களாகும்.

❖ இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்வது நல்லது. ஆனால், ஈசனது படைப்பான அனைத்து உயிர்களுக்கும் பணி செய்தல் மிக நன்றாகும்.

❖ மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரையும் வழிபடுங்கள், இறைவனை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழியாகும்.

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## 27.12.2020 முதல் 20.12.2023 வரை



### கும்ப இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், 26.12.2020 அன்று 12 ஆம் இடத்திற்கு வருகின்றார். இப்பொழுது ஏழரைச் சனி உங்களுக்குத் தொடங்குகின்றது. ஏழரைச் சனி என்றவுடன் நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. உங்கள் இராசி நாதனாகவும் விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனி பகவான். எனவே யோகத்தையும் கொடுப்பார், விரயத்தையும் கொடுப்பார். விரயத்தைச் சுபவிரயமாக மாற்றிக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

## ஏழரைச் சனிதான் தொடங்கியது! இறைவழிபாட்டால் மகிழ்ச்சி வரும்!

மகர இராசியில், ஏற்கனவே நீச்சம் பெற்ற குரு பகவான் சஞ்சரிக்கின்றார். அவரோடு இப்பொழுது சனிபகவான் சேர்வதால் 'நீச்சபங்க ராஜயோகம்' உருவாகின்றது. உங்கள் இராசியைப் பொறுத்தவரை குரு, தன-லாபாதிபதி என்பதால் எந்தச் செயலைச் செய்தாலும் பணத்தைக் கையில் வைத்துக்கொண்டு செய்ய வேண்டுமென்ற நிலை ஏற்படாது.

### ஏழரைச்சனி ஆரம்பம்

மிகப்பெரிய கிரகமாகச் சொல்லப்படும் சனி பகவான், உங்களுக்கு இப்பொழுது ஏழரைச்சனியாக வருகிறார். விரயச் சனி இப்பொழுது வந்திருக்கின்றது. இதற்குபிறகு ஜென்மச்சனி, அதன்பிறகு குடும்பச்சனி என்று வரும். பொதுவாக விரயச்சனி காலத்தில் அமைதியாகச் செயற்படுவது நல்லது. யாரையும் பகைத்துக்கொள்ள வேண்டாம். தொழிலில் தேக்கநிலையும். தெளிவற்ற மனதுடன் செயற்படும் சூழ்நிலையும் ஏற்படும். உறவினர்களும் நண்பர்களும் செய்த உதவிக்கு நன்றி காட்டமாட்டார்கள். இடமாற்றம், ஊர் மாற்றம் போன்றவை வருவதற்கான அறிகுறிகள் தென்படும். நினைக்க இயலாத இடத்திற்கு மாறுதல் கிடைக்கலாம்.

### சனியின் பார்வை பலன்கள்

உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை, 2, 6, 9 ஆகிய மூன்று இடங்களிலும் பதிகின்றது. வாக்கு, தனம், குடும்பம், எதிர்ப்பு, வியாதி, கடன், தந்தை வழி உறவு, பாக்கியம், பாகப்பிரிவினை போன்றவற்றைக் குறிக்கும் இடங்களில் எல்லாம் சனியின் பார்வை பதிவதால் அங்கெல்லாம் புதிய திருப்பங்களும் மாற்றங்களும் வரப்போகின்றது. 2 ஆம் இடத்தில் சனி பார்வை பதிவதால் செல்வாக்கு அதிகரிக்கும். குடும்பச் சுமை கூடினாலும் அதைச் சமாளிப்பீர்கள். தன வரவு தாராளமாக இருக்கும்.

சனியின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் உத்தியோகத்தில் மாற்றம் உண்டு. தொழிலைப் பொறுத்த வரை புதிய பங்குதாரர்கள் வந்திணையலாம். எதிரிகள் விலகுவர். அலைச்சலைக் குறைத்துக் கொள்ளுங்கள். மன அழுத்தத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.

சனியின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் பெற்றோர் வழியில் பிணக்குகள் ஏற்பட்டு பிறகு இணக்கம் வரும். இழந்த சொத்துக்களை மீண்டும் பெற வாய்ப்பு உண்டு. கைக்கு கிடைத்த பூர்வீக சொத்தை விற்றுவிட்டு புதிய இடம் வாங்கி மனை கட்ட வேண்டுமென்ற ஆர்வம் கைகூடும். தேவைகள் பூர்த்தியானாலும் கூட சில சமயத்தில் மனக்குழப்பம் அதிகரிக்கும். மகரத்தில் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் சனி உங்கள் இராசிக்கும் அதிபதி என்பதால் அதை வழிபடுவதன் மூலம் வளர்ச்சி அதிகரிக்கும்.

### சனியின் பாதசாரப் பலன்கள்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

27.12.2020 முதல் 27.12.2021 வரை: சூரியன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, சுபச்செய்திகள் அதிகம் வந்து சேரும். தங்களுக்கோ, தங்கள் சகோதரர்களுக்கோ, தங்களின் பிள்ளைகளுக்கோ கல்யாணம் போன்ற சுபகாரியங்கள், பெற்றோர்களின் பிறந்தநாள்




விழாக்கள் கொண்டாடும் சூழ்நிலை ஏற்படும். வெளிநாட்டு ஒப்பந்தங்களும் வரலாம். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடும் உங்களின் மதிநுட்பத்தாலும் மகத்தான பலன்களை வரவழைத்துக் கொள்ளும் நேரம் இது.

28.12.2021 முதல் 26.1.2023 வரை: சந்திரன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, மனதில் நினைத்ததை மறுகணமே செய்யும் யோகம் உண்டு. நடக்கும் தொழிலைக் கொடுத்துவிட்டு வேறு தொழிலை செய்ய நண்பர்களின் ஆதரவைக் கேட்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, 'வெளிநாடு செல்ல முடியவில்லையே' என்ற ஆதங்கம் தீரும். திடீரென நிர்வாகம் உங்களை வெளிநாட்டிற்கு அனுப்ப பரிசீலனை செய்வர். பெற்றோர் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். மனக்குழப்பம் அகல அனுபவஸ்தர்கள் ஆலோசனை சொல்வர். பொது நலத்தில் இருப்பவர்கள் வீண்பழிகளுக்கு ஆளாக நேரிடும்.

27.1.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, சகோதர சச்சரவுகள் அகலும். பத்திரப் பதிவிலிருந்த தடைகள் விலகும். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் உங்கள் சிக்கல்கள் தீர வழிகாட்டுவர். இக்காலத்தில் சனி பகவானும் உங்கள் இராசியில் சஞ்சரிக்கப் போகின்றார். ஜென்ம சனியாவதால் உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும் பொழுது விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. முன்கோபத்தின் காரணமாகச் சில பாதிப்புகளும் முன்னேற்றத்தில் குறுக்கீடும் ஏற்படும். தொழிலில் பங்குதாரர்களும் விலகிக் கொள்வதாக பயமுறுத்துவர். எதிரிகளின் பலம் கொஞ்சம் அதிகரிக்கும் நேரமிது.

### குருப்பெயர்ச்சிக் காலம்

சனிப்பெயர்ச்சி காலத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி நடக்கிறது. கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசியிலேயே தன லாபாதிபதி உலா வருவதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். மதிப்பும் மரியாதையும் உயரும். மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, வாக்கு ஸ்தானம் பலப்படுகின்றது. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். உடன் பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர்.

### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

21.3.2022 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின் போது, மேஷத்தில் இராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். இந்த காலகட்டத்தில் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள். வெற்றிகள் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இராகுவால், தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். கேதுவின் ஆதிக்கத்தால், தொழில் வளர்ச்சி மிகச் சிறப்பாக இருக்கும். பூர்வீக சொத்துக்கள் கைக்கு வந்துசேரும். பழைய வாகனத்தை மாற்றீடு செய்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆலயத்திருப்பணிகளிலும் கவனம் செலுத்துவீர்கள்.

8.10.2023 இல் நடைபெறும் இராகு-கேது பெயர்ச்சியின் போது, மீனத்தில் இராகுவும் கன்னியில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். இந்த நேரத்தில் தனவரவு தாராளமாக வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய மகிழ்ச்சியான தகவல் கிடைக்கும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும் சூழ்நிலை அமையும். அஷ்டமத்தில் கேது சஞ்சரிப்பதால் குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல்நலக் கோளாறுகள் உருவாகும். பிறருக்கு பணப்பொறுப்பு சொல்லியதன் மூலம் சிக்கல்கள் உருவாகலாம்.

### வெற்றி பெற வைக்கும் வழிபாடு

பிரதோஷ நாளில் நந்தியம்பெருமானையும் சிவனையும், உமையவளையும் வழிபடுவதோடு, இல்லத்து பூஜை அறையில் நந்தீஸ்வரர் படம் வைத்து அதற்குரிய பதிகங்கள் பாடி வழிபட்டால் நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

### சனியின் வக்கிர காலம்

12.5.2021 முதல் 26.9.2021 வரை, 25.5.2022 முதல் 9.10.2022 வரை, 27.6.2023 முதல் 23.10.2023 வரை என மூன்று முறை சனி வக்கிரமடைகின்றார்.



இதன் விளைவாக விரயங்கள் அதிகரிக்கும். வீண் பழிகள் வந்து சேரும். அசையா சொத்துக்கள் வாங்குவதில் தடை ஏற்படும். ஆரோக்கியப் பாதிப்புகள் உருவாகும். குடும்பப் பெரியவர்களையும் அனுபவஸ்தர்களையும் கலந்து ஆலோசித்து செய்வதன் மூலம் எதிலும் வெற்றி காண இயலும். தொழிலில் விழிப்புணர்ச்சி தேவை.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு ஏழரைச்சனியாக தொடங்குகின்றது. எனவே எப்பொழுதும் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. ஆதாயத்தைக் காட்டிலும் விரயம் கூடும். கணவன் - மனைவி ஒற்றுமை திருப்தி தரும். விலகிய சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் கூடும். பிள்ளைகளின் வேலைவாய்ப்பு, திருமணம் போன்றவற்றில் செய்த ஏற்பாடு பலன் தரும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பாராத மாற்றம் வந்து சேரும். உத்தியோகத்தில் எந்த முடிவும் எடுக்க முடியாமல் தவிக்கும் சூழ்நிலை உண்டு. பொறுப்புகளை பிறரிடம் ஒப்படைத்தால் பிரச்சினைகள் ஏற்படும்.(தொடரும்)

## பொருட்கள்...

பாசாங்கு செய்துவிட்டு பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா சாந்தசோலையில் வியாபார நிலையம் ஒன்றை நடத்தும் பெண் நேற்று முன்தினம் இரவு கடையில் தனிமையில் இருந்துள்ளார்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத இரு நபர்கள் அவரது வியாபார நிலையத்தில் பொருட்களை கொள்வனவு செய்வதுபோல பாசாங்கு செய்துவிட்டு அவர் அணிந்திருந்த இரண்டு பவுண் தங்க சங்கிலியை அறுத்து சென்றுள்ளனர். (ம-299)

## அரசியல் கைதி...

தொடர்பாக சபை அமர்வில் பிரதமர் மகிந்தவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரிலுள்ள அவரது அலுவலகத்தில், நேற்று நடைபெற்ற ஊடகவியளாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அரசியல் கைதிகள் தொடர்பாக பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது என்றும் பாராளுமன்றத்திலும் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், இதுவரையில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் ஆக்கபூர்வமான செயற்பாட்டை இன்றுவரை மேற்கொள்ளவில்லை என்றும் கொரோனா வைரஸ் தொற்று, சிறைச்சாலையிலும் பரவி வரும் நிலையில், அவர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக, 15 பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடம், எழுத்து மூலக் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளதாகவும் இது தொடர்பான நிலைப்பாட்டைத் தெரிந்து கொள்வதற்காக, இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள பாராளுமன்ற அமர்வுகளின்போது, அவரைச் சந்திக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (ம)

## வட மாகாணத்...

பீட ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்ட பரிசோதனையில் 5 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேரும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

இவர்கள் ஐவரும் மருதனார்மடம் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள்.

மேலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவரும் வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)

## கொரோனாவால்...

உள்ளாகி உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 215 ஆக அதிகரித்துள்ளது.

இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய ஆண் ஒருவரும் 86 வயதுடைய மற்றுமொரு ஆண் ஒருவருமே நேற்று உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ம)

## சுமந்திரன்...

வவுனியாவில் செய்தியாளர்கள் மத்தியில் கூறி இருப்பதாக ஊடகங்களில் படித்தேன். சுமந்திரனின் இந்த கூற்றில் எந்த உண்மையும் இல்லை. இது அப்பட்டமான பொய்.

இந்த வரைபை தான் தயாரிக்கவில்லை என்றும் வேறு யாரோ தான் தயாரித்துள்ளார்கள் என்பதை அறிந்ததும் நான் இணக்கம் தெரிவித்துள்ளதாக வேடிக்கையான கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது போல இந்த கடித விவகாரம் தொடர்பில் சுமந்திரன் தெரிவித்துவரும் கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணாக அமைகின்றன. சுமந்திரன் எனது பார்வைக்காக எனக்கு அனுப்பிய கடிதத்தை தான் வரையவில்லை என்றும் புலம்பெயர் அமைப்பு ஒன்றே வரைந்ததாகவும் கூறி வருகிறார். எது உண்மை எது பொய் என்பது எனக்குத் தெரியாது.

ஆனால் இந்த கடிதத்தை எனக்குத் தந்தது சுமந்திரனே. எனக்கு இந்த வரைபைத் தந்த சுமந்திரன் அதனைத் தயாரித்தது வேறு யாரோ என்று எதுவும் குறிப்பிட்டதாக எனக்கு ஞாபகமில்லை. "நாங்கள்" என்ற பதத்தைப் பாவித்ததாகவே எனக்கு நினைவு என்றுள்ளது. (ம)

## பருத்தித்துறை...

சேர்ந்த ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் தொற்று உறுதியானது.

அவருக்கு தொற்று ஏற்பட்டது எவ்வாறு என்பது தெரியவில்லை.

அவர் பல இடங்களிலும் பருத்தித்துறை, நெல்லியடி உள்ளிட்ட பல பகுதிகளிலும் நடமாடியுள்ளார்.

மேலும் கடந்த மூன்று நாட்களுக்கு முன் மருதனார்மடத்தில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தகத்துக்குச் சென்றிருந்ததாகவும் அங்கு குடி தண்ணீர் குடித்ததாகவும் அவர் சுகாதாரத் துறையினருக்கு தெரிவித்துள்ளார். (ம)

# வெளிநாட்டு ஊடகங்களுடன் கலந்துரையாடுவது நன்மையல்ல

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

நாட்டில் கட்சி ஒன்றுக்குள் இருக்கும் பிரச்சினையை வெளிநாட்டு ஊடகம் ஒன்றுடன் கலந்துரையாடுவது எந்த வகையிலும் நன்மையானதாக இருக்காது என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது குறித்து தாம் கவலைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

## இந்திய மீனவர்...

ருந்த இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மீனவர் மீது கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தியதுடன் படகு இயந்திரத்தையும் செயலிழக்கச் செய்துள்ளனர்.

வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி பகுதியைச் சேர்ந்த அப்புலிங்கம் போதன் (வயது-49) என்ற மீனவர் தனியே படகிலே மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றார்.

இந்தியாவில் இருந்து வத்தைப் படகில் வந்த இந்திய மீனவர்கள் போதன் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியதுடன், அவருடைய படகு இயந்திரத்தின் இணைப்புக்களைத் துண்டித்து அதனைத் தூக்கிச் செல்ல முயன்றிருக்கின்றனர்.

அதன் பின்னர், தனியே வந்ததால் விட்டுச் சென்றிருக்கின்றோம், வேறு நபர்களும் வந்திருந்தால் கொலை செய்து கடலில் வீசியிருப்போம் என்று அவர்கள் மிரட்டி விட்டுச் சென்றிருப்பதாக பாதிக்கப்பட்ட போதன் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதேவேளை அவர், சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (ம-60)

## மணல்...

இரவு அதிரடிப் படையினர் முற்றுகையிடல் நிலையில் கொள்ளைக் கும்பல் தப்பி ஓடியுள்ள போதும் வாகனம் கைப்பற்றப்பட்டிருக்கின்றது.

மணற் கடத்தல் தொடர்பில் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற அதிரடி படையினர் மணற் கொள்ளையில் ஈடுபட்ட கன்ரர் ரக வாகனத்தை விரட்டிச் சென்றுள்ளனர்.

சுமார் ஐந்து கிலோ மீற்றருக்கும் மேற்பட்ட தூரத்திக்கு விரட்டி சென்ற போதும், கொள்ளையர்கள் வாகனத்தைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

வாகனமும், கடத்தப்பட்ட மணலும் அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டு, பருத்தித்துறைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ம)

## 45 ஆயிரத்தை...

எண்ணிக்கை 45 ஆயிரத்தை கடந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை மேலும் 277 பேருக்கு தொற்று உறுதியானதை அடுத்து மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 45 ஆயிரத்து 241 ஆக உயர்ந்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை தொற்றுறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 44 ஆயிரத்து 964 ஆக அதிகரித்துள்ளது. (ம)

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1649 திகதி 2021.01.04
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 07 50 60 61

மெகா பவர்
திகதி 04/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0724
G 16 03 19 56 64

மஹஜன சம்பத
திகதி 2021/01/04
சீட்டிழுப்பு இலக்கம் 4357
Z 8 4 7 8 1 1

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 04.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2652
P 08 13 37 42

தன நிதானய
திகதி - 2021.01.04
சீட்டிழுப்பு இலக்கம் - 394
T 33 48 61 65

அத கோடிபதி
கிழமை: திங்கள் சீட்டிழுப்பு இல: 1153 வர்ணம்: சிவப்பு சீட்டிழுப்பு திகதி: 04.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 95,888,045
வெற்றி இலக்கங்கள் 14 40 52 72 S

சனிதா
கிழமை: திங்கள் சீட்டிழுப்பு இல: 3483 வர்ணம்: கடும் நீலம் சீட்டிழுப்பு திகதி: 04.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,912,486
வெற்றி இலக்கங்கள் 04 07 13 16 Q

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,353,225/=
திகதி: 04.01.2021 வெற்றி வாரம்: 3034 வர்ணம்: மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 15 29 47 60 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,823,120

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1327 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 04/01/2021 தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் I 14 64 66 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் 61,447,989

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1721 சீட்டிழுப்பு திகதி 04.01.2021
வெற்றி இலக்கங்கள் 24 37 52 62 V
எதிர்வரும் சுப்பர் பரிசுப்போதி ரூ. 20,000,000
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

## ஜெனிவா வரைபு தயாரிக்கும்போது

# அடிப்படை விடயங்களை விட்டுக்கொடுக்க மாட்டேன்

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் தரப்பு தொடர்பான ஜெனிவா விடயங்களை கையாள்வதற்கான வரைபைத் தயாரிக்கும் போது அடிப்படை விடயங்களை விட்டுக் கொடுக்க மாட்டேன் என நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு விக்னேஸ்வரனால் அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியாவில நடைபெற்ற கூட்டத்தில் சுமந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோர் மனித உரிமைகள் சபை தொடர்பிலான பொதுவான வரைபு ஒன்றை தயாரிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிகின்றேன். இது நல்ல விடயம். மூன்று கட்சிகளுக்கும் இடையே இது தொடர்பில் இணக்கப்பாடு ஏற்படுவதற்கு என்னால் ஆன ஒத்துழைப்பை வழங்குவேன். குறித்த வரைபு எது என்று இதுவரையில் தெரியாது.

ஆனால், அடிப்படை விடயங்களில் விட்டுக்கொடுப்பதற்கு நான் தயார் இல்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் ஆகியவை சாத்தியம் இல்லை போன்ற கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இவை சாத்தியமோ சாத்தியம் இல்லையோ பாதிக்கப்பட்ட சமூகம் என்ற வகையில் கிடைக்கின்ற எல்லா வழிகளையும் நாம் முயற்சிக்க வேண்டும். சரிவராதுவிட்டால் பரவாயில்லை. வெற்றி தோல்விகள் என்னைப் பொதுவாகப் பாதிப்பதில்லை. ஆனால், இவற்றுக்காக முயற்சிப்பது சர்வதேச ரீதியில் நீதிக்கான எமது போராட்டத்தை மேலும் முன்னெடுத்து செல்வதற்கு வலுவான ஒரு அடித்தளத்தை ஏற்படுத்தித் தரும் என்பது எனது நம்பிக்கை. அதேவேளை, நாம் கடும்போக்கு நிலையில் நின்றால், ஐ. நா மனித உரிமைகள் சபையின் பிடியில் இருந்து இலங்கை விடுபட்டுபோகும் என்ற அர்த்தம் அற்ற கருத்துக்களையும் நான் நிராகரிக்கின்றேன். நாம் கேட்பது எதுவுமே கடும் போக்கு அல்ல. அவை நீதியின் பாற்பட்ட நியாயமான கோரிக்கைகளே.

அரசாங்கம் தமிழர்களுக்கான தீர்வை புதிய அரசியல் யாப்பினுடாகத் தரும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்தும் செயற்படாமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேரில் தன்னை ஆதரித்த மக்களுக்காகவும் தமிழ்த் தேசியத்துக்காகவும் உண்மையாக உழைக்க முன் வருமாறு அவரை அன்புடன் வேண்டுகின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அதி கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்

### இடமாற்றம் வழங்க கோரி ஆளுநர் செயலகம் முன் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

அதி கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் தமக்கு இடமாற்றம் வழங்க கோரி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதிகஷ்ட பிரதேசங்களில் 3 வருடங்கள் கடமையாற்றினால் போதும் என்று கூறியவர்கள், 6 வருடங்கள் கடந்தும் தமக்கான இடமாற்றங்கள் வழங்கவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்குமாகாணகல்விஅமைச்சின் செயலாளர் உட்பட பல தரப்பினருடமும் தமது கோரிக்கைகளை முன் வைத்த போதும், யாரும் சரியான தீர் வினை பெற்றுத்தரவில்லை என போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் குற்றஞ்சாட்டினார்.

வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து தமது கோரிக்கையை முன்வைக்க தாம்வருகை தந்திருந்த போதும், ஆளுநரை சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும், ஆளுநரின் செயலாளரைச் சந்தித்து தமது பிரச்சினைகளை தொடர்பில் கேட்டறிந்ததாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது இடமாற்றம் தொடர்பில் பல போராட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும், இனியும் தீர்வுகள் எட்டப்படவில்லையாயின், வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவோம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-33.101)

## வடக்கு, கிழக்கு தமிழ் பிரதேசங்களில்

# தமிழ் மொழியை பயன்படுத்துவதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(கிளிநொச்சி)

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வெளியிடப்படுகின்ற வெளியீடுகள் அனைத்தும் குறித்த பிரதேச மக்களுக்கு விளங்கிக் கொள்ளும் வகையில் அமைய வேண்டும் என்றும் மத்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற திட்டங்களுக்கான பெயர்கள் அனைத்தையும் வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் தமிழிலேயே பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசாங்க திணைக்களங்களின் பிரதேச அதிகாரிகள் தேவையற்ற அசௌகரியங்களை தவிர்க்கும் வகையில் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கிளிநொச்சி மாவட்ட இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் சிங்கள மொழியில் மாத்திரம் எழுதப்பட்டிருந்த நிலையில் ஏற்பட்ட அசௌகரியங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் நேற்று கலந்துரையாடப்பட்ட போதே கடற்றொழில் அமைச்சரினால் குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வெற்றியாளர்களுக்கான, சான்றிதழ்கள் வழங்கு நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற நிலையில், சான்றிதழ்கள் சிங்கள மொழியில் மாத்திரம் அச்சிடப்பட்டிருந்தமையினால் எழுதப்பட்டிருந்த விடயங்களை புரிந்து கொள்ள முடியாத இளைஞர்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட அதிகாரிகளுக்கு தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

அத்துடன், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒருங்கிணைப்புச் செயலாளர்களான வை. தவநாதன் மற்றும் கோ. ருஷாங்கன் ஆகியோரின் கவனத்திற்கும் குறித்த விடயம் கொண்டு வரப்பட்ட நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இதுதொடர்பாக அவதானம் செலுத்தப் பட்டுள்ளது.

ஏற்கனவே, மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் திட்டங்கள் அனைத்திலும் தமிழ் மொழி முழுமையாக அமுல்படுத்தப் பட வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அரசாங்க அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


சிறுநீரகம் தேவை

B,O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு (5178)

076 239 9874

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

(C-1051)

0768226240 DHL

உங்கள் கற்கை நெறிகளின் திறன்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்பு

பயிற்சியின் பின்பு

| பதவிகள் | வருமானம் |
|---|---|
| உதவி முகாமையாளர் | 38,000/= - 40,000/= |
| எழுதுனர் | 32,000/= - 36,000/= |
| மேற்பார்வையாளர் | 25,000/= - 32,500/= |
| கணக்காளர் | 38,000/= |
| விற்பனை பிரதிநிதிகள் | 23,000/= |

பயிற்சியின்போது - 15,200/= தொடக்கம் 23,000/= வரை (விதிமுறைகள் உள்ளன) (5180)

076 808 2241

ஹோட்டல் மனேஜ்மன்ட்

அரசாங்க, சர்வதேச அங்கீகார சான்றிதழ்





பயிற்சிக் காலத்தில் ரூ.1 லட்சம் வரை வருமானம்

100% வேலைவாய்ப்பு

இலவச ஆங்கில வகுப்பு

தமிழ் - ஆங்கில மொழி மூலமான விரிவுரைகள்

ஆரம்பம் 09.01.2021 11.01.2021

+Certificate in Hotel and Resort Management LKR - 30,000 (520 hrs)

+Certificate in International Cookery & Culinary Arts LKR 60,000 (600 hrs)

T.P: 076 057 9999, 021 314 6171

No.1544, K.K.S Road, Jaffna. (C-1096)

RAVEENS EMC

KARAVEDDY

Year 6 Admission (2021)

( English Medium )

SCHOLARS ONLY.

Admission Forms are available

Closing Date : 08.01.2021 (Friday)

(C-1092)

P.EASWARANATHAN

Director

வேலையாட்கள் தேவை

உணவகம் ஒன்றிற்கு,

- சமையற்காரர்
- சமையல் உதவியாளர்
- றொட்டி போடுபவர்
- பிறைட்றைஸ் போடுபவர்

உடனடியாகத் தேவை. (5179)

077 725 9245

இடம் : திருநெல்வேலி


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.